
www.tamilarangam.net

# அலை ஓசை

அலை 3 புரட்டாதி 2005 ஓசை 8



## குருநகர் சென். ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் வெளியீடு

'வாழ்வுக்கு வழிவகு - அறியாமை அகல கல்வியே அகல்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**குருநகர் சென் ஜேம்ஸ்**
**பழைய மாணவர் சங்கம்**

# அலை ஓசை



**அட்டைப்படம்**
**செல்வன். மிதுன் கமில்ரன்**
**(வயது 9)**

**அலை 3**
**ஓசை 8**

புரட்டாதி 2005

**ஆசிரியர் :**
**எமிலியானுஸ் ஜோய்**

**இதழ்க்குழு :**
**குருசுமுத்து பீலிக்ஸ்**
**அலோசியஸ் கமில்ரன்**
**திருமதி. கீதா கமில்ரன்**
**திருமதி. யசோதா எட்வேட்**



முகவரி :
**E. Judes**
7, Square des Anglaises
93800 Epinay Sur Seine
France
Tél. 00 33 (0)1 48 41 71 37
e-mail: kappiya@hotmail.com



**கணனி - அச்சுப்பதிப்பு**

**ஸ்ரீ பாரதி அச்சகம்**
**பாரிஸ் - பிரான்ஸ்**
00 33 (0)1 42 05 46 04


# எண்ணச் சிறகடிப்பு...

*வணக்கம்,*

குருநகர் மக்களின் கல்வி, கலை, கலாச்சார மேம்பாடுகளில் ஆர்வத்துடன் இயங்கி வருகின்ற எமது சங்கம் இவ்வருடம் எழுத்தாளர்களை குறிப்பாக குருநகர் மண்ணின் மைந்தர்களை வெளி உலகுக்கு அடையாளம் காட்டும் புதிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் எனது கவிதைத் தொகுப்பான ''அந்தக்கரையில்'' எனும் நூலை வெளியீடு செய்து எனது படைப்புக்கள் தமிழ் மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடையும் வண்ணம் ஆவன செய்துள்ளது. அது மட்டுமல்லாமல் எனது நூலை சுவிஸ், தமிழீழம் (யாழ்ப்பாணம்) ஆகிய இடங்களிலும் நூல் அறிமுக விழாக்களை ஏற்பாடு செய்திருந்தது.

அதேபோல் ஈழத்து இலக்கியப் பரப்பில் தனக்கென தனி இடம் வகுத்து தற்போது இலண்டனில் வாழ்ந்து வரும் கவிஞர் மு.புஸ்பராஜன் அவர்களின் "மீண்டும் வரும் நாட்கள்" எனும் கவிதை நூலை பிரான்சில் அறிமுகம் செய்து வைத்துள்ளோம். இப்படியாக காலத்தின் தேவை கருதி தன்னை விசாலப்படுத்திக் கொண்டிருக்கும் எமது சங்கத்தின் எதிர்காலத் திட்டங்களுக்கு எமது மக்கள் ஒன்றிணைந்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் சுவிஸ் சமூகசேவை அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒன்று கூடலில் சுவிஸ் சமூகசேவை அமைப்பு, ஜேர்மன் அமைப்பு, எமது சங்கம் ஆகியன கலந்து கொண்டு ஒன்றிணைந்து செயல்படுதல் பற்றி ஆராயப்பட்டது.

குருநகர் மண்ணின் தேவைகள் பற்றியும், அதன் வளர்ச்சிக்கான எமது சேவைகள் பற்றியும் சிறப்பாக ஆராயப்பட்டு ஒரு ஆரோக்கியமான செயற்பாடுகளை வகுக்க இந்த ஒன்று கூடல் ஏதுவானதாக இருந்தது. ஒன்று கூடலை ஏற்பாடு செய்திருந்த சுவிஸ்சமூக சேவை அமைப்புக்கு எமது சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். ஏற்கனவே ஆசிரியர் தலையங்கத்தில் நான் எழுதியது போல 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை எமது மக்கள் கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் நாடுகளில் வாழும் குருநகர் முன்னேற்றச் சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பது எனது பேரவா.

*அன்புடன்*
**எ. ஜோய்**
*இதழ் ஆசிரியர்.*

---

நான் சொல்கிறேன் என்பதாலேயே நீ ஏற்றுக்கொள்ளாதே. உன் பகுத்தறிவினால் நான் சொல்வதையெல்லாம் கேள்விக்குரிய தாக்கு. உனக்கு நீயே ஒளியாக இரு.

- புத்தர்

ஒரு மனிதன் எவ்வாறு மற்றவர்களை விமர்சனம் செய்கிறானோ, அவ்வாறு அவனும் விமர்சிக்கப்படுகிறான்.

- சாமுவேல் ஜான்சன்

எவ்வளவு கடினமாக உழைக்கிறேன் என்று சொல்லாதே; எவ்வளவு சாதித்தாய் என்று சொல்.

- ஜே. லிங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணின் மைந்தன்



பிறப்பு: 12-03-1947

**கல்வி : குருநகர் சென் ஜேம்ஸ் பாடசாலை**

**தொழில் : இலங்கைப் போக்குவரத்து சபையில் பேருந்து நடத்துனராகவும் பின்னர் சாலைப் பரிசோதகராகவும் பணிபுரிந்தவர்.**

ஆரம்பத்தில் பாரதிதாசன் பாதிப்பினால் கவிதைகள் எழுதினார். தினபதி பத்திரிகையில் இளைஞர்களுக்கான **"கவிதா மண்டலம்"** பகுதியின் மூலம் பரவலாக அறிமுகமானார்.

அத்துடன் தீபம் தொலைக்காட்சி ஒளிபரப்பிய குருநகர் பற்றிய **"கடலோரத்தில் ஒரு கல்வாரி"** நிகழ்ச்சியின் பின்னணியில் இவர் இருந்துள்ளார்.

2004ல் **"மீண்டும் வரும் நாட்கள்"** கவிதைத் தொகுதியினை வெளியிட்டுள்ளார். இவரது கவிதைகள் ஆங்கிலம், கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இன்றுவரைக்கும் காத்திரமான படைப்பாக பேசப்பட்டுக்கொண்டிருக்கும் **"மரணத்துள் வாழ்வோம்"** என்ற கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

1960களில் தமிழகத்தின் **"எழுத்து"** பத்திரிகை மேற்கொண்ட புதுக்கவிதை பரிசோதனை முயற்சிகளை அறிந்தபின்னர் புதுக்கவிதையையே தனது கவிதைக்குரிய வடிவமாகக் கொண்டார்.

## கவிஞர்
## மு. புஸ்பராஜன்

கவிதையுடன் சிறுகதை, கலைஇலக்கிய விமர்சனம், திரைப்பட விமர்சனம், சர்வதேச அரசியல் போன்ற துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.

1970ல் இவர் தொகுத்த நெய்தல் வளர்பிறை மன்றத்தின் நாலாவது ஆண்டுமலரான **"நெய்தல்"** இலக்கியமலர் இலக்கிய உலகின் பலரது கவனத்தையும் பெற்றது.

1975ல் குருநகரிலிருந்து வெளிவந்த **"அலை"** இலக்கிய இதழின் ஆசிரியர்களில் இவரும் ஒருவர். அதன் இலக்கியத் தாக்கம் இன்றுவரை நீடிக்கிறது.

1976ல் இவர் தொகுத்து வெளியிட்ட **"அம்பா"** என்ற மீனவர் நாட்டார் பாடல்கள் ஈழத்தில் மட்டுமல்லாது தமிழகத்திலும் இவருக்கு இலக்கிய அந்தஸ்தைத் தேடிக்கொடுத்தது.

ஐபிசி வானொலியில் **'சங்கமம்'** நிகழ்ச்சியில் நிகழ்ச்சியாளருடன் இணைந்து கலை இலக்கியம், திரைப்படம், உள்நாட்டு,சர்வதேச அரசியல் ஆகியவைகள் பற்றிய விமர்சனங்களை முன்வைத்தார்.

ஈழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலங்களில் போராளிகளினால் பிரச்சார மேடைகளில் இவரது சில கவிதைகள் பிரச்சாரக் கோஷங்களாக உச்சரிக்கப்பட்டது இவரது கவிதைக்கான தனிச் சிறப்பாகும்.

இலக்கியப் பரப்பில் தனக்கென தனியிடம் பிடித்து அமைதியாகவும் ஆழமாகவும் தனது பேனா முனை மூலம் இலக்கியப் படைப்புக்களைத் தந்து கொண்டிருக்கும் கவிஞர் மு. புஷ்பராஜனை இந்த இதழின் மூலம் மண்ணின் மைந்தனாக கௌரவப் படுத்துவதில் எமது சங்கமும், எமது மண்ணும் பெருமை கொள்கிறது.

இவரது பன்முகப் படைப்புக்கள் உலகெலாம் புகழ்பெற வாழ்த்தி நிற்கின்றோம்.

### கோடை

**கோடையின் வெம்மையில்**
**குளிர்கால**
**ஆடை நீக்கிய வாழைகள்**
**விழி வெறி கொள்ளும் வண்ணம்**
**வடிவுக்கொன்றாயும்**
**வண்ணத்திற்கொன்றாயும்**
**காதல் தேவதையின்**
**சிம்மாசனங்கள் அசைய**
**வீதியெங்கும்**
**வனப்பின் உலா**
**வாடிக் கிடந்த தினவில்**
**நாற்றுக்கள் அசைய**
**புயல் காற்றிலோ மனம்**

- மு. புஸ்பராஜனின் மீண்டும் வரும் நாட்களிலிருந்து....


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்தக் கரையில் நூலாய்வு

**- விக்கி நவரட்ணம் (சுவிஸ்) -**

பிறந்தது முதல் இறப்புவரை மனிதன் எதையாவது தேடிக்கொண்டே இருப்பான். இந்தக் கவிஞனின் ஆரம்பமே தேடல்தான். "இச்சைகளும் எச்சிகளும் மிச்சமாக, பொருளீட்டலுக்கான தேடலில் மனிதம் மரிக்கிறது.... வாய்க்கும் வயிற்றுக்குமான போராட்டத்தில், வாழ்தலின் ஜீவன் கருக்கப்படுகிறது... இருந்தும் இதுவரை தேடிக் கிடைக்காத மனிதம் இன்றோ, நாளையோ, என்றோ கிடைக்கும்வரை என்தேடல் நீளும்." கவிதை வரிகளின் ஆரம்பமே இதயத்தை இங்கிதமாக வருடிச் செல்கிறது. தேடலில் சிக்கிக்கொண்டிருந்த கவிஞனின் மனமோ புயல்காற்றிலே சிக்கிய காவோலையாக தத்தளிக்கிறது. சமகால நினைவுகளை அலைகளோடு அளவளாவியே கவிதையாகிப்போன வார்த்தை வீச்சுக்கள் கூறுகின்றன. "கால் தெறிக்க ஓடி புகைந்து புகைந்து குறுகிப்போன என் பெருங்குடல், புரியவில்லை எனக்கு எதுவும் புரியவில்லை, எனக்குள் நானே தொலைந்து தொலைந்து உயிர்காவும் வெற்றுடலாய் நான்" அந்த அர்த்தமற்ற வாழ்வை அழிக்க நினைத்து, எம்மை, எம் நினைவுகளை ஒரு கணம் தன்னோடு தமிழீழ மண்ணில் இழுத்து நிறுத்தி யார் வருவார் என்கரம் பற்றி வழிகாட்ட என்று கேட்கிறார். உண்மையைக் கூறப்போனால் அந்தக் கவிதை நாற்காலியை இழுத்து கம்பீரமாக உட்காந்திருக்கிறான் இந்தக் கவிஞன் என்றுதான் சொல்லவேண்டும்.

காதல் என்ற இரு உயிர்களின் உணர்வுகளை சங்ககாலம் தொட்டு சேர்தல், பிரிதல், ஊடல் என்பது காதலர்க்கே உரியது என்பது எல்லோருக்கும் தெரியும். சிந்து பாடிவரும் தென்றல் அந்தநிஜ முகங்களை ஒருமுறை உரசிச் செல்லும்போது காதல் அங்கே மலர்ந்திருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. பிரிதல் என்பதை அவர் அற்புதமாக விபரித்திருக்கிறார். "குருதியில் குளிப்பாட்டி செவ்வாயில் தலைகாட்ட, அவள் பட்ட துன்பமெல்லாம் தென்றலாய் பிரவகிக்க வார்த்தையாலே சொல்லிமாளா.... நீளும் கொலைக்கரங்கள் உறவைத் துண்டிக்க நீண்டது எங்கள் தூரம். எனக்கான அவளின் காத்திருப்பு எனக்குப் புரிகிறது. அவளுக்கான என் முகம் எனக்குள் இருக்கிறதா?" இந்த நிஜமுகம் உண்மையில் தன் காதலை தொட்டிலில் இட்டுத் தாலாட்டிப் பார்த்திருக் கிறது என்றுதான் சொல்லவேண்டும். தமிழீழ வரலாற்றில் புதிய புறநானூறு காற்றாலும், மழையாலும் ஏன் காலத் தாலும் அழிக்கமுடியாத வீரகாவியத்தை, மார்பிலே புண்பட்டு மரணிக்கும் மண்ணின் மைந்தர்களின் எழுச்சியிலே உலக அரங்கை துயில் எழுப்பி சமாதானத்தை கோர்வையாக்கிப் பார்க்கத் துடிக்கும் நிகழ்காலத்தை சுட்டிக்காட்ட "நம்பிக்கை வேர்கள் துளிர்விடுகிறது என்ற நம்பிக்கையில் நகர்கிறது பேச்சுவார்த்தை, இழப்புக்கள் தந்த வலிகளில் மயிலிறகாய் மருந்து தடவும் சமாதானச் செய்திகள்..... நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்பட்டால் சமாதானம் நிச்சயம், உரிமைகள் மறுக்கப்பட்டால் மீண்டும் போர்வாள் தரிக்கப்படும்" என்றே போர்வாளாக நிமிர்ந்து நிற்கும் பேனா கொட்டியது நீல நிறமா? அல்லது குருதியா? போர்முனைக்கு புதிய பாய்ச் சலுக்காய் தயாராகுங்கள் என்றே முரசு கொட்டிப் பார்த திருக்கிறார் இங்கே.

மெய்யுரைப்பதுவும் பொய்யுரைப்பதுவும், மனிதவிய லில் தவிர்க்கமுடியாத ஒன்று. ஏதாவது ஒரு காரணத் திற்காகவாவது பொய்யுரைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படு கிறது. கவிஞனின் அகதி வாழ்வில் பொய்யும் மெய்யும் கலந்து கவிநயம் பேசுகின்றது. அகதிகளின் கூடாரத்தில் கவிஞன் மெய்யுரைக்கிறான் "அகதிகளின் கூடாரத்தில் மெய் யுரைத்த போது, அவர்கள் சிரித்ததும் நான் அழுததும், பொய்யுரைத்தபோது அவர்கள் அழுததும் நான் சிரித்ததும், அப்பொழுதெல்லாம் நான் நானாக இல்லை, என்று அம்மாவு க்கு ஓர் கடிதம் எழுதுகிறான். "வெளிநாடு என்றவுடன் ஏக்கமுடன் பார்த்து நின்றேன் இங்கு வந்தபின் தான் தெரியு தம்மா நம்நாட்டின் பெருமையை என்று இந்தக் கரையில் நின்று அந்தக்கரையைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுதிலே குருதி தோய்ந்த நம் தேச வீதியெல்லாம் துள்ளித் திரிந்த காலமம்மா, அன்றிருந்த சந்தோசம் இன்று எனக்கில்லை யம்மா, சொந்த மண்ணை மறந்து ஓடிவந்தவன் நானம்மா, இந்நிலை எனக்கு வேண்டுமம்மா" என்று இந்தக் கரையிலிரு ந்து அந்தக்கரை ஞாபகங்களை ஒவ்வொரு கணமும் நம் கண்முன்னே கொண்டு வந்து ஞாபகம் வருகிறதா? ஞாபகம் வருகிறதா? என்றே நிறுத்திவைத்துப் பார்த்திருக்கிறார். "புதையும் மணலும் ஊரியுமான பாலை நிலத்தில் நான் தனித்தே பயணித்திருந்தேன். எங்கெல்லாம் தொண்டை வறண்டு தாகம் எடுத்ததோ அங்கெல்லாம் மண் பானை நிரப்பிய குடிநீரைக் கண்டேன்" அந்தக் காலத்தில் குடிநீர் தேடி நாம் எங்கும் போகவேண்டியதில்லை அந்த வாசல்க ளில் தெரியும் மண் பானையின் சுகந்த நீர் வறண்ட தொண் டையை நனைப்பதுதான் எனக்கான சுகந்தம் என்று சூரிய வெப்பத்தைத் தணிக்க வைத்துவிட்டு, கனவுகளில் சஞ்சரி த்துவிடுகிறார். நிஜமானவாழ்வு ஒருமுறை என்ன பலமுறை ரசித்துப்பார்க்கும் வாழ்வு. மனசுகளைத் தொட்டு சிறகடித்துப் பறந்தவாழ்வு பாடசாலைவாழ்வு. "பூப்பெய்திய பூவையெல் லாம் விழிகளில் நாணேற்றும்... அரும்பு மீசைக்காரர் எல் லாம் பள்ளி வழிபார்த்து விழியசைப்பர்... முழுமையான விடியல் ஒன்று முரசு கொட்டி அரங்கேறும்.." வயதானாலும் எனக்குள் மீண்டும் வாலிபம் குதிரை வேகத்தில் துள்ளி ஓடுகிறது. அந்த வேம்படி, சுண்டிக்குளி, கன்னியர் மடத்து கன்னியர் அணிவகுத்துச் சென்ற நினைவலைகள் கடலலை நுரைப்பூக்களாக என் மனதை நனைத்துச் செல்கிறதென் றால் இளைஞன் இவன் கனவுகள் நிஜமாகும் வரை மனத்துள் பூத்துக் குலுங்கும் கவிப் பூஞ்சோலைக்கு நீர் வார்த்துக் கொண்டே இருக்கவேண்டும்.

கனவுகளில் மிதந்தாலும் மனதில் மிதமிஞ்சிய ஏக்கங்கள் ஒவ்வொருவருக்கும் நிறைந்திருக்கும். ஆனால் இங்கே கவிஞர் சொல்ல வந்த ஏக்கம் என்னவென்றால், வெளிநாட்டு ஏக்கம். அக்கரைக்கு இக்கரைப்பச்சை, இக் கரைக்கு அக்கரைப்பச்சை. இன்றைய அன்றைய நிகழ்வு களை சமூகம் இன்னும் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்பதை தம்பி எப்படி கூறுகிறார் என்றால் "வசதியான வாழ்வுக்காய் இருப்புக் களைத் தொலைத்து, பயணமுகவர் வாசலில் நாயாய் இன்னும்.... வீட்டை விற்று கல்வியை இழந்து, உறவுகளைப் பிரிந்து, மண்ணை மறந்து இழப்புக்கள் இன்னும் தொடர்கிறது. எல்லாவற்றையும் தொலைத்தாலும் வெளி நாட்டு மோகம் யாருக்கு?, அங்கே இருப்புக்களைத் தொலைக்கும் உள்நாட்டுத் தம்பிக்கு..... "

www.tamilarangam.net

அந்தக்கரையினில் இன்றைய ஐதார்த்தமும் இது தான், தாய் நாட்டு ஏக்கம் தேடியதைக் கரைக்கும் மேல் நாட்டு அண்ணனுக்கு. எனவே ஏக்கங்கள் தொடரும் இழப் புக்களும் தொடரும். இருந்தாலும் யாக்கிரதை என்கிறார் மிகப் பவ்வியமாக. ஏன் என்று கேட்டால்! அலையடிக்கும் ஓசையதில் அடங்கிவிட்ட நம் வாழ்வு, புயலடித்துப் போன தால் புலம்பெயர்ந்து போனோம் இம்மண்ணில்....

குருநகராம் திருநகரின் கரையோரம் கால்பதித்து அலையோடு கவிதைபேசி, காற்றோடு போர்செய்து பட கேறித் தினம் சென்று, மீனோடு மீண்டும் வந்து பானை யோடு சோறுண்டு, மகிழ்வோடு வாழ்ந்து வந்த இனிமையான நாட்கள் எங்கே... வந்த மண் என்றும் சொந்த மண் இல்லை, சொந்த மண் மகிழ்வு வந்த மண்ணில் இல்லை. எந்த மண் சென்றாலும் எங்கள் மண் மறவாது சிவந்த மண் விடியும் நாள் சிலகால தூரமில்லை என்ற மண்ணின் விடுதலை எண்ணமெல்லாம் விடுதலைக்காக வேண்டி கவிமலர் தூவிப் பார்த்திருக்கிறார்.

விடியாத இரவாக இருந்ததாலும் மழைக்கால இர வாக இருந்ததால் புறப்பட்டிருக்கிறது இந்தக் கவிதை. சில்லென்ற குளிரோடு கலந்த இதயம் ஒன்று கதை சொல்கிறது இங்கே. "காற்று வெளியெங்கும் கரைந்து, காணாமல் போகும் என்கடைசி ஓலம்.... அந்நிய மண்ணில் நான், என் துண்டாடப்பட்ட சிறகுகளுடன், எல்லாம் இழந்த பின்னும் என் உயிர் துடிப்பது ஏன்? மண்ணின் பாதம் தொட.'' துண்டாட முடியாத தன் நினைவுகளுடன் கவிஞன் விடியாத இரவொன்றில் போராடுகிறான். ஏன் என்றால் அந்த ஆனி பத்து எண்பத்தாறு மண்டைதீவுக்கடலில் சமாதானம் சாகடிக்கப்பட்ட நாளை அவனால் மறக்கமுடியவில்லை. "அதிகாலை விடியுமுன்னே, படகேறிச்சென்றவரை விடியாத இரவொன்று விழுங்கிய கதை கேளும், துடியாகத் துடித்தனராம், பாவிகள் இரங்காது குதறியே கொன்றனராம் ஒன்றல்ல முப்பத்தொரு பேர்கள் ஐயா.....! மலர் தூவ வாருங்கள் எம் மைந்தரைப் போற்றுங்கள்'' என்று உணர்ச்சிக் கோபுரமாக உயர்ந்து நிற்கும் ஜோய் அங்கு ஏதும் இல்லை என்று அழுகிறான். எங்கே என்று கேட்க மனம் துடித்தபோது பாக்களால் என்னை அழவைத்துப் பார்த்துவிட்டான். "என் சுவாசம் விரும்பிய காற்றுக்கூட அங்கில்லை; கந்தகக் காற்றில் என் மூச்சு மணிக்கு முப்பது தடவை மூர்ச்சை யானது. செல்பட்டு மடிந்த தாயின் மார்புக்காயங்களை கவ்விப்பிடித்து பாலருந்தியதாம் ஒரு பிள்ளை'' உணர்வுகள் பீறிட்டுப் பாய்கின்றன மயிர்களோ சிலிர்த்தெழுந்து நிற்கின் றன. கோரத்தாண்டவமாடிய இராணுவ வெறியர்களால் சின்னாபின்னமாக்கப்பட்ட நினைவுகளால் எங்கள் மனத்தி ரையை கூரிய கத்தியால் கிழித்துப்பார்க்கிறார். பழைய நினைவுகளைத் தவிர அங்கு ஏதுமில்லை.

மரணிக்காதவர்களை மெல்ல மெல்ல கொல்லும் விசமாய் புலப்பெயர்வு. அரண்டு புரண்டு தோற்றுப்போகும் நிகழ்காலத்தை சிந்திக்க வைத்துவிட்டு இந்தக் கரையி லிருந்தபடியே கையிலிருந்த கடிவாளத்தை அப்படியே லாவகமாகத் திருப்புகிறார். "விமான ஓட்டியே விமானத்தைத் திருப்பு.... எனது பாதை எனது தேடல் எதுவுமே இங் கில்லை. என் சிந்தனையைக் கட்டவிழ்க்கும் கவிதைகளும் உயிரோடு உறவாடி உணர்வுகளுக்குள் சிலுமிசம் செய்யும் காதலியும் அந்தக் கரையினிலே தானே'' என்று எலும்பு தாங்கும் தசைத் தொகுதிக்குள் தொங்கும் இதயத் துடிப்பின் அனுபவத்தைக் கூறிவிட்டு மீண்டும் வா என்கிறார். நெஞ் சைத் தொட்டுவிட்டாரா? இல்லை. மனிதரைவிட, மலர்களை விட, தான் வடித்த கவிதைகளைவிட, தன்னைவிட, தன் மனைவியைவிட நேசித்த முதல் பிள்ளையாக இவன் வளர்த்த அந்த நன்றியுள்ள பிராணியை "என்னை மௌனத்தின் படுகுழியில் தள்ளிவிட்டு நீ மட்டும் ஏன் மரணத்தின் பாதாளத்தில் இறங்கிவிட்டாய்'' தான் வளர்த்த செல்லப் பிராணியை நினைத்து அழுதுவிட்ட இக் குழந் தையை தாய்மையின் தாலாட்டு இங்கே இதழ் விரிக்கிறது. இது எங்கள் மண்ணுக்கே உரிய வாசம். "என் கருவறையில் பூத்துவந்த விடிகாலைச் சூரியனே சௌக்கியமா? சிற கொடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும் உறவுகளி டத்தில் கையேந்தி பிச்சை கேட்டு சிறை உடைத்து உன்னை சுதந்திரப் பறவையாய் உன்னை வெளிநாடு பறக்கவிட்டேன். மகனே! மண்ணையும் தாயையும் நேசிக்க மறந்தவன் தன்னையே இழந்தவன்'' என்று கார்த்திகைப்பூ மணக்கும் தாய்மண்ணின் வாசமதை தாய் எப்படி உணர்த்து கிறாள் என்பதை தம்பி தன் கவிதை வரிகளால் ஊசி முனையில் உணர்வுகளால் நிக்க வைத்துவிட்டு தாய்க்குப் பின் தாரம் தான் என்ற அந்த அன்பிற்காக ஏங்கும் போது நாளையாவது கிடைக்குமா? எது அந்த அன்பு. ஏக்கத்தின் விளிம்பில் நின்றுகொண்டே "தொடுகையும் புணர்தலும், அன் பும் அரவணைப்பும் உன்னைப்போல் அவனைப் போல் எனக் கும் நாளையாவது கிடைக்குமா? இல்லை நீடிக்குமா? வாலி பத்திற்கும் வயோதிபத்திற்கும் என் வயது கணிக்கப்பட பெருமூச்சின் வெப்பத்தில் சாம்பலாகிப் போகும் என் திரு மணம் என்ற பந்தம் கிடைக்கும்வரை ஏங்கும் இளைஞர் களுக்கேயுரிய கவிதை வரிகள். அந்த அரவணைப்பு கிடை க்கும் வரை யாரிடம் போவார் இவர். அதுவரைக்கும் நண் பனிடம் முறையிடுகிறார். இரத்தம் சொட்டச் சொட்ட வந்து நிற்கிறார். பூமிக்குள் கல்லுக்கும் கல்லுக்கும் நடந்த போராட் டம் நீரும் காற்றும் கரையுடன் மோதி ஜீவத் துடிப்புடன் நடத்திய போராட்டம். சுனாமி என்ற பேரலை எல்லோர் கண்களிலும் கண்ணீரைப் பிறப்பெடுக்க வைத்த போது இந்தக் கவிஞனால் மட்டும் எப்படி இந்தக் கவி வரிகளை எழுத முடிந்தது. "உன் புகழ் பாடிய என் கவிதைகள் கண்ணீர் வடிக்கவும் முடியாமல் காறி உமிழவும் முடியாமல் கலங்கியே விழிக்கிறது. காரணம் கண்ணீரிலும் நீருண்டு. உமிழ் நீரிலும் நீயுண்டு. கவிஞனே உன் கவிக்குள் கொஞ்சம் புகுந்து நீ கூறிய வார்த்தைகளை எடுத்து நான் கூறுகிறேன். நீ வார்த்தைகளற்ற சூனியத்துள் தூக்கி வீசப் பட்டாலும் உன் கவிதைகள் ஒவ்வொன்றும் இனி எங்களுக் கானது. நீண்ட நெடிய காத்திருப்புடன் காத்திருந்தாலும் இந்த நாள் நீ எதிர்பார்த்திருந்து அந்த நாள்.

நிறையைக் கூறிவிட்டேன். குறையையும் கூற வேண்டியவனாகிவிட்டேன். நூலின் அளவு, தாளின் தன்மை, நூலின் விலை இங்கு குறிப்பிடப்படவில்லை.

- நூலாசிரியர் : எ. ஜோய்
- வெளியீடு : ஸ்ரீ பாரதி அச்சகம்.



www.tamilarangam.net

# சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அதிபர்களும் தலைமைத்துவ நிர்வாகக் கடமைகளும்

குருநகர் மக்கள் புத்திசாலித்தனம் நிறைந்தவர்கள் என்று நான் சொன்னால் மற்றவர்கள் ஏற்பார்களா? புத்திசாலிகள், தைரியசாலிகள், தொழிலாளிகள் என் மக்கள் என்று பாராட்டுவதை நான் கேட்பதையே பெருமையாக எண்ணுவேன், ஆசைப்படுவேன். மற்றஊர் மக்களோடு பேசும்போது என்னூரை விட்டுக்கொடுக்காமலே பேசுவேன். அப்போதெல்லாம் கல்வி அறிவைக் கற்காத மக்களாகவே இருந்தார்கள் என்று பலர் சொல்லும்போது கொதித் தெழுவேன். இந்தக் கற்கை நெறியை நெறிப்படுத்தவேண்டிய கடமையிலிருந்து தவறியர்வர்களைத் திட்டித் தீர்ப்பேன். நாளைய சந்ததியின் சக்தியைப் பாழடித்து விட்டவர்களை நினைத்து கவலையடைவேன். பள்ளியின் போதனை இன்றும் குருநகரில் எந்த நிலையில் உள்ளது என்ற கேள்வியும் ஆச்சரியத்தோடுதான் நிற்கின்றது.

இன்றைய விஞ்ஞானயுகம் இருபத்தி ஓராமாண்டு உயர்வின் உயரத்தை எட்டிப்பிடித்து வலுப்பெற்று நிற் கின்றது. குருநகர் சமூகம் எந்தநிலை எட்டியுள்ளது? புதிய தலைமுறைச் சந்ததியினர் வேகமாகப் பாய்கின்றனர். கல்வி யில் விழிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும் பெறுபேறு களையும் தூக்கிக் கொண்டுதான் நோக்குகின்றனர்.

இன்று தலைமுறையினர் மூளையின் ஆரம்பம் தொடங்கி எப்படி கல்வி முறையைப் பதியப்படுத்த வேண்டும் என்பதில் நிர்வாகக் கடமைத்துவம், பெற்றோர், புத்திஜீவிகள் தவறிக்கொண்டே போகின்றார்கள். மனோபாவத்தின் மறுபக்கம் பலமா? பலவீனமா?.

நம்மவர்களைப் பற்றிய குறையை நாம் மதித்து வைத்தது எந்தளவுக்கு உள்ளது? நம்ம பிள்ளைகளைப் படிக்க வைக்க இயலாது என்ற எண்ணம் நம்ம ஊரில் ஊறிப்போயிருக்கிறது. இந்த கவலைக்குரிய நிலையை இன்றும் காணலாம். இத்தகைய மூடப்போக்கு கிள்ளி எறியப்படவேண்டும். இன்னுமொரு சிக்கல் போர்க்கால நிலை. இந்தநிலையில் கல்வியின் பாதிப்பு தமிழீழத்தில் எல்லா ஊர்களிலும்தான் நிலவுகின்றது. ஆசிரியர்களும், அதிபர்களும் கல்வி கற்பிப்பதற்கான பக்திநெறியுடன் செயல்படும் காலக்கட்டாயம் இந்தப் போர்க்காலத்தில் தான் செயல்படவேண்டும். செயல்படும் என்ற நம்பிக்கையோடுதான் மாணவர்கள் கற்கைநெறியை எந்த அனர்த்தங்கள் அவலங் கள் இன்னல்களுக்குள்ளும் கற்பதில் முன்னிற்க முயல்வார் கள். மாணவர்கள் தம் வளர்ச்சியை நாளையவர்கள் சிந் திக்க வளர்வார்கள். போர்க்காலத்தில் இச்சிந்தனைநெறி மிகமிக அவசியமானது ஆசிரியர்க்கு.

சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அழுகிறவன் தெம்பற்றவன். அழுகையிலிருந்து சந்தர்ப்பத்தை ஏற்படுத்து கிறவன் நெஞ்சுரமுள்ளவன். போர்க்காலச் சந்தர்ப்பத்தைச் சாக்காகச் சொல்லுவது ஆத்தாதவன் செயல். எத்தனை புயல்களை நீ சமாளித்துக் கடந்தாய் என்பதைப் பற்றி உலகத்திற்குக் கவலையில்லை. கப்பலைப் பத்திரமாகக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தாயா என்பது பற்றிய கேள்வியே கவலை. வில்லியம் மீக்லியின் மணிமொழி இதுதான். நம்மூர் மாணவர்களை நான் கேட்கும் தாழ்வான வேண்டுதலும் - கல்வியுண்மையை நமதுடமையாக்கி கண்ணாகக் கல்வியைப் பெற்று வளர்த்துக் கொள்வதுதான் நம்மூர் சமூகத்தின் வாழ்க்கையில் பெரிய தேவையாக உள்ளவேலை.

நமது பெற்றோரின் மனோபாவம் ஆரோக்கியம் இல்லாதபோது நமது கல்வியில் எப்படி ஆரோக்கியம் மலர முடியும்? இது ஊர்ப்பிரச்சனைதான் உண்மையில் நாட்டுக் கும் பொருந்தும். நம்மூர் மாணவர்களின் கல்வி வளர்ச்சி க்கு நம்மூர் மக்களே எதிரிகளாக இருக்கிறார்கள். இந்தநிலை மாற்றம் மாறாதிருப்பது நல்லதல்ல. நல்லவை தொடரவேண்டும் மாற்றம் ஏற்படவேண்டும்.

நம்ம ஊரில் எத்தனை கழகங்கள் இருந்து இயங்கு கின்றன? இவையாற்றும் சேவைகள் கல்வி முன்னேற்றத் திற்கு உறுதுணையாக உற்றவழியில் பயன்படுகின்றனவா என்பது கேள்வியாக நின்று தொங்காமல் கேட்கப்பட வேண்டிய கேள்வியாக உள்ளன. இக்கேள்விக்குப் பதிலைப் பின்னர் பார்ப்போம்.

**கல்லாரைக் காண்பதுவும் தீது**
**கல்லாத மூடரைக் காணவும் ஆகாது**
**கல்லாத மூடர்சொல் கேட்கக்கடன் அன்று**
**கல்லாத மூடர்க்கு கல்லாதார் நல்லாராம்**
**கல்லா மூடர் கருத்தறி யாரோ**

(திருமூலர் திருமந்திரம் 317)

சமுதாயமாகச் சேர்ந்து வாழத்தொடங்கிய இந்த ஊர்மக்கள் ஆரம்பத்தில் 39 குடும்பமாக இருந்து காலப் போக்கில் பெருகி மக்கட்பெரும் சமூகமாக வாழ்கின்றனர். இதில் ஒருவன் சமூகத்திற்காக வாழாமல் விடுதல் என்பது பாதிப்பினையே உண்டாக்கவல்லது. அப்படி வாழ்தல்

## மா.கி. கிறிஸ்ரியன்

என்பது எதனால் உண்டாகின்றது? தனிமனிதன் தனது நலனுக்காகச் சமுதாயம் செயல்பட வேண்டும் என்று நினைப்பதால் உண்டாகலாம் அந்த நினைப்பிற்குச் சமுதா யம் வளைந்து கொடுக்காது என்று கண்டவுடன் அவன் சமு தாயத்தைச் சீரழிக்க முற்படுகின்றான். இதனடிப் படையிலும் விளைவது தீயசெயல்கள். இதன் விளைவின் தாக்கத்தை சமுதாயம் அடையும் போது அங்கு கல்வி நிலைப்பாட்டின் செயல்பாடு பாதிக்கப்படுகிறது. மெழுகுவர்த் தியாக எரிந்து உருகும் திரியாக மேன்பாடுகளுக்கும் சோதனை மிகுந்த வேதனைவந்து நெருக்குகின்றது. சமூகத்தின் பெயர் மாசு படுகின்றது. தாழ்வின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. இப்படியான குறைபாடுகள் எப்படிக் களையப்படவேண்டும், நம் குழந்தைகளிடமிருந்தே நாம் முதலில் ஆரம்பிக்க வேண்டும். குழந்தைகள் இளம்பிராயத்தில் நல்வழிப்படுத்தக் கல்வி கற்கப்போகும் இடமும் சூழலும் மாசுபடாதபடி இருக்கவேண்டும் இதைச் சமூகம் கவனிக்க வேண்டும். அதனிலும் முதல் தாய், தந்தையினர் மூலம் முதல் பேணிப்பின் பெறுபேறிருக்கவேண்டும். இந்தப் பேற்றுநிலை நம் சமூகத்தில் உரம்பெற்று வளரவேண்டும். குடும்பச் சூழ்நிலையும் ஊர்ச்சூழ்நிலையும்தான் மனிதனை உருவாக்

www.tamilarangam.net

குகின்றது. கல்விக்கும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந்த நடைமுறை கல்வியின் நல்நோக்கில் எழவேண்டும்! மேலை நாட்டாரின் (ஆங்கிலேயர்) கல்வியின் தாக்கத்தால் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு விழிப் புணர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் உண்டாக்கிய கல்வி முறையால் இலங்கையில் தமிழர்களே உயர்வடைந்தனர். அக்கல்வி அகன்றதும் ஆழமானதுமான புதிய கண்ணோட் டத்துடன் கூடிய கல்வி நிலையைத் தமிழர்கள் அடைந்தனர். வடமாகாணத் தமிழர்களே அதிகம் முன்னேற்றம் கண்ட வர்கள். ஆங்கிலேயரால் உருவான மேதைகள் அதிகம். ஈழத்தின்கண் உருவான மேதைகள் போற்றற்பாலானவர்கள். இதன்கண் ஆங்கிலேயரால் உருவான கல்லூரிகளும் பெயர்பெற்றன. அக்காலம் கல்வி ஆளுமையின் பொற்காலம். அக்காலத்தில் கல்வி பயின்ற பலர் இச்சமூகத்தில் இருந்தனர். இருந்தவர் கல்வியில் சிறந்தவர். இருந்தவர் பின் இறந்தவர். அதன்பின்பும் கல்வியில் சிறந்த ஆர்வமுள்ளவர் பலரும் இருந்தனர்.

**வீடுதோறும் கலையின் விளக்கம்**
**வீதிதோறும் இரண்டொரு பள்ளி**
**நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்**
**நகர்களெங்கும் பலபல பள்ளி.**

இப்படிப் பாரதி பாடினார். இந்த விருப்பத்தில் குருநகரில் உருவான பள்ளியும் இருந்ததா? இதன் பின்னணி அன்றும் இன்றும் தெளிவுபடாத தேடலாகவே உள்ள கவலைக்குரிய விடயமாகும். இந்த வேளையில்தான் சென் ஜேம்ஸ் பாடசாலையும் கல்வியும் உருவானது 1951ம் ஆண்டு யாகப்பர் ஆலயத்திற்கு போலாந்து நாட்டவரான முதல் பிதா ஈ பொமிக்கோ பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். இவர் மக்களின்மேல் அன்பும் கருணையும் கொண்டவர். ஞாயிறு கடந்திருநாள் பூஜை முடிந்ததும் சைக்கிளில் ஊரைச்சுற்றிலும் வலம்வருவார். அவர் வரு வதைக் கண்ட மக்கள் அதே புழுதிமக்கள் முழந்தாளிட்டு கும்பிடுகிறேன் சாமி என்று வணங்கி அளப்பரிய அன்பு செலுத்தினர். அந்த சத்தியநிலை இன்று எந்தச் சுவாமிக்குக் கிடைக்கும் - கிடைக்கும்படி யார் நடக்கிறார்கள்? இவர் காலத்தில்தான் யாழ்ஆயர் அவர்களால் சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை கட்டிமுடிக்கப்பட்டுத் திறப்புவிழாவும் நடைபெற்றது. அப்போது முதல் இப்பாடசாலையில் 700 மாணவர்கள் கல்வி பயின்றனர். 1960 மார்கழி 1ம் திகதி இப்பாடசாலை அரசாங்கத்தால் சுவிகரிக்கப்பட்டது.

இப்பாடசாலை அன்று இந்த நிரப்பப்பட்ட இடத்தில் யாழ் ஆயர் மேற்கொண்டமை இப்போதும் அப்போதும் பெருந்தவறைத்தான் சுட்டிக்காட்டுகின்றது. இதனால் தெற் கில் வாழ்ந்தவர்கள் சம்பத்தரிசியார் கல்லூரிக்குள் நுழைவதற்கான சந்தர்ப்பத்தை அதிகம் இழந்தனர். என்பதை இந்த தெற்குப் பாமரத்தன மக்கள் அன்று உணரவில்லை. இன்று அதன் வலியும் கொடிய மனவலியும் புரிந்து கொதிக்கின்றனர். இருந்தாலும் வடக்கினர் அதிகமாக சம்பத் தரிசியார் கல்லூரியில் கல்வி கற்றனர். அதனால் ஆங்கில அறிவு தொழில் முறை என்பவற்றாலும் பொருளாதார வசதி படைத்தவர்களாகவும் கல்விகற்பதற்கேற்ற அமைதியான சூழலைப் பெற்றவர்களாகவும் விளங்கினர். அவர்களும் குரு நகர் வாசிகளாக வடக்குப் பகுதியை மையம் கொண்டனர். தெற்குப் பகுதியை மிக நெருக்கமானதுமான குடியிருப்பை யும் திருமண பந்தங்களையும் அதற்குள்ளாகவே உறவாடி ஆள் ஆள் நெருக்கமாக இருந்து கல்வி கற்பதற்கும் இடையூறாக அமைந்தமையால் வடக்கையும் தெற்கையும் வேறுபடுத்திப் பார்க்கவும் முடிகின்றது. இந்தநிலையில்தான் அன்று உருவான கீழ்த்தரமான சொற்பிரயோகம் தொனிக்கக் காரணமாக இருந்ததையும் கவனிக்கலாம்.

மேலோங்கிக் கரையார், கீழோங்கிக் கரையார் இது நம்மவரே நமக்குள் ஏற்படுத்திய ஏற்பற்ற சமூகம் கேட்டு அவமதித்த தீயவினை! இழிந்த தூசண வார்த்தை. எப்படியாக நம்மை நாமே நசுக்கியுள்ளோம்? சத்தியத்தின் பெயரால் நம்மவரும் பல தவறுகளைத் தெற்கில் வாழ்பவர்களுக்குச் செய்துள்ளனர் என்பதை இப்போதாவது உணர்ந்தீர்களா? சம்பத்தரிசியார் கல்லூரிக்குள் நுழையத் தடை எப்படி உருவாக்கினார்கள் என்பதை ஒரு நண்பர் என்னிடம் கேட்டார்.

நாங்கள் நெடுந்தீவு, கரம்பன், மன்னார், வங்காலை, கிளிநொச்சி இருந்தெல்லாம் வந்து படிக்கிறோம். நீங்கள் பக்கத்தில் இருக்கிறீர்கள் ஏன் சம்பத்தரிசியார் கல்லூரியில் படிக்க முடியாமல் போனது? என்று அந்த நண்பர் கேட்டதில் நியாயம் உண்டு. நான் பதில் சொல்வதில் தயக்கமும் கொதிப்பும் ஏற்பட்டது. இதற்கான நிரல்தானே மேலே தரப் பட்டது. அப்பட்டமாகச் சொல்ல முடியாமல் மௌனடைப்பில் மரணிக்கின்றது. இருந்தாலும் பாரதியாரின் பாடல் உறுதி கொண்ட நெஞ்சினை உடைய மக்களென அழைக்கின்றது.

**ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா!**
**உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா!**
**தெளிவுபெற்ற மதியினாய் வா வா வா!**
**தீமைகண்டு பொங்குவாய் வா வா வா!**

இன்று எம்மக்களை வரவேற்று வாழ்வளிக்க வேண்டிய கடப்பாடு காலம் கடந்து பிறந்தாலும் கல்வியில் உயர்நிலை அடைந்திடல் வேண்டும். இளைய சமூகத்தின் உணர்வைத் தட்டி புதிய குருநகரைக் காணவேண்டும்.

**தொழில்வள நகராய்க் காணும் குருநகரை நாம்**
**கல்வியில் உயர்கலைநகராய் உயர்த்துவோம்.**

உயர்த்த உருவாகியதான கழகங்கள், மன்றங்கள், சன சமூக நிலையங்களையும், சென்ஜேம்ஸ் ஆண்கள் பாட சாலை அதிபர்களும் தலைமைத்துவ நிர்வாகக் கடமை களையும் பார்ப்போம். பார்க்குமிடத்தில் இப்பாடசாலை திற ப்பு விழாவில் இருந்து இன்றுவரை அதிபர்கள் வரிசைத னைக் கால அட்டவணையில் கவனியுங்கள்.

1951.............. 1965 அதிபர் ஆசீர்வாதம் றோமான்
1965.............. 1967 அதிபர் க.யோ.ஆசிநாதன்
1967.............. 1969 அதிபர் பிலிப்பு சவரிமுத்து
1969.............. 1971 அதிபர் எஸ் நீக்கிலஸ்
1971.............. 1971 அதிபர் எஸ்.எம்.அந்தோனிப்பிள்ளை
1972.............. 1974 அதிபர் சவரிமுத்து சூசைப்பிள்ளை
1974.............. 1978 அதிபர் ஏ.எவ்.யோசப்
1978.............. 1979 அதிபர் அகஸ்ரின்
இப்பாடசாலையில் ஆசிரியராக இருந்து அதிபரானவர்
1979.............. 1985 அதிபர் பிரான்சிஸ் மரியநாயகம்
இப் பாடசாலையில் ஆசிரியராக இருந்து அதிபரானவர்
1985.............. 1994 அதிபர் ஏ.ஸ்ரனிஸ்லோஸ்
1994.............. 1999 அதிபர் ச.தங்கராசா
மாணவனாக இருந்தவர் பின்பு அதிபராக வந்தவர்
1999.............. 2001 அதிபர் வி.எம்.எட்வேட்
இடையில் தற்காலிக அதிபராக சில மாதங்கள் திருமதி. ராசாயகம் பெண் அதிபராக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.
2002.............. 2003 அதிபர் ச.தங்கராசா
மாற்றம் பெற்றுப்போய் திரும்பவும் அதிபராக வந்தவர்
2003............ முதல் அதிபர் ஞானப்பிரகாசர்

www.tamilarangam.net

இதற்கு முன்னம் ஆசிரியர் யே.அமலசீலன் *B.A (cey) Dip - in - Ed - Jaffna* அவர்களது கூற்றினைக் கவனிப்போம்

குருநகரில் ஆண்களிலும் பார்க்க படித்த பெண்கள் அதிகம். இது குழந்தைகளின் கல்விவளர்ச்சிக்கு மிகவும் சாதகமான நிலையாகும். ஆகவே குருநகர்த்தாய்மார் மனம் வைத்தார்களாயின் இவ்வூரின் கல்வி: பாடசாலைகளிடமல்ல, கல்விமான்களிடமல்ல, பிள்ளைகளிடமல்ல பெற்றோர்களே, உங்கள் கையிற்றான் இருக்கின்றது. நீங்கள் கைகொடுத்துத் தூக்கிவிடாவிட்டால் இவ்வூரின் கல்வி தூங்கிவிடும்.

## ஊர்ப்பாடசாலைகளின் பங்கு :

இவ்வூரிலுள்ள மாணவர்களில் ஏறக்குறைய 25 வீதத்தினர் சென்.ஜேம்ஸ் பெண் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் கற்கின்றனர். எனவே இப்பாடசாலைகளின் வளர்ச்சியிலேயே இவ்வூரின் பரவலான கல்வி வளர்ச்சி தங்கியிருக்கின்றது என்பது வெளிப்படை. இப்பாடசாலைகளை உயர்ந்த நிலைக்கு வளர்த்தெடுத்தல் என்பது இயலாத காரியம் அல்ல. எனினும் இலகுவான காரியமுமல்ல. ஏனெனில் பொருளாதார வளம், கல்வியறிவு உடைய பெற்றோரின் பிள்ளைகள் பெரும்பாலும் இப்பாடசாலைகளிற் கற்பதில்லை. மாறாக கல்வியில் பின்தங்கிய வீட்டுச்சூழல், மந்தமான பொருளாதார நிலை என்பவற்றைக்கொண்ட பிள்ளைகளே பெரும்பாலும் இங்கு கற்கின்றனர். இவர்களுள்ளும் நுண்மதி கூடியவர்கள் இடையில் வேறு பாடசாலைகளுக்குச் சென்றுவிடுகின்றனர். (பெண் பாடசாலையிலும் ஆண் பாடசாலையிலே இந்நிலை கூடுதலாகக் காணப்படுகின்றது) இதனால் பரீட்சைப் பெறுபேறுகள் தாழ்நிலையில் இருக்கின்றன. இது பொதுமக்கள் மத்தியில் பாடசாலையிலுள்ள நம்பிக்கையைக் குறைப்பதோடு ஆசிரியர்களின் ஊக்கத்தையும் குறைக்கும். இந்நிலையிலிருந்து மீள பாடசாலை அதிபர்களின் கடும்முயற்சியும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் மட்டும் போதுமானதல்ல. பாடசாலைக்கு வெளியிலுள்ள அமைப்புகளும் இதிற்பெரும் பங்கு வகிக்க வேண்டியுள்ளது. முக்கியமாகக் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி இதிற்பெரும்பங்கு வகிக்க வேண்டும்.

ஏற்கனவே இது கல்வி தொடர்பான கருத்தரங்குகளை நடத்தியுள்ளதோடு பாடசாலைகளின் பல முயற்சிகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். குருநகர் அபிவிருத்திச் சங்கம் கல்வி வளர்ச்சிக்கென நிதி ஒதுக்கி ஊர்ப்பாடசாலைகளுக்கு உதவுவதோடு புலமைப்பரிசில் திட்டத்தினை வகுத்துள்ளமையும் கல்வி வளர்ச்சி முயற்சிக்குத் தம்மாலானவற்றைச் செய்யத் தலைப்பட்டுள்ளமை அறிவு வளர்ச்சிக்கான அறிகுறியாய் தெரிகிறது.

தனியொரு மனிதன் அவன் கற்ற கல்வியைக் கொண்டு கணிக்கப்படுவது போலவே ஒரு சமூகமும் தன்னகத்தே கொண்டுள்ள கல்விமான்களின் தொகையைக் கொண்டே கணிக்கப்படுகிறது. கல்வி அறிவைமட்டுமல்ல, ஒழுக்கம், பழக்கவழக்கம், தலைமை தாங்கும் திறன், பேச்சாற்றல், எழுத்து வன்மை, நியாயப்படுத்தும் ஆற்றல், புரிந்துகொள்ளும் உணர்வு, சட்டத்தை மதிக்கும் மனப்பக்குவம், நட்பு, ஒப்புரவு எனப் பல மனித விழுமியங்களை வளர்க்கிறது. இவையே கல்வியின் உண்மையான பயன். ஆகவே குருநகரைத் திருநகர் ஆக்க கல்வி இல்லாத பேர்களே இல்லாமற் செய்வோம்.

இப்படிச் சொல்கிறார் ஆசிரியர் அமலசீலன் அவர்கள் (நன்றி - புனித யாகப்பர் ஆலயம் 125வது ஆண்டு நினைவு மலர்) அவரது கூற்று ஒருசில கழகங்களைத்தான் குறிப்பிடுகின்றதையும் அவதானிக்கலாம். ஊருக்குள் பத்திற்கும் மேற்பட்ட பொதுநல முற்போக்குச் சங்கங்கள் இயங்குகின்றன. இனிமேலாவது நாளடைவில் கல்வி முன்னேற்றத்திற்கான நற்பலன் நல்கும் நற்காரியங்களில் நின்று சகலரும் இயங்குதல் குருநகரின் கல்விச் சேவைக்கான ஒழுகுதலாகும். இதில் ஒன்றைக் கவனிக்கலாம், இவை அனைத்தும் தெற்கில்தான் இருந்து வருகின்றன. இதனால்தான் கலையின் வளர்ச்சி மேன்மையுற்றன. கலை, விளையாடும் களம். அரங்கம் அமைவுற இம்மக்கள் இருப்பதும் பெருமையே.

ஒழுங்கான தொண்டு கல்விக்கு உலகம் போற்றும் நிண்டு ஜெகவாழ்வில் கீர்த்தி பெற்றிட தூயநற் கல்வியைக் கற்றிடு இப்படியே இன்னுமொரு ஆசிரியரின் ஆதங்கத்தையும் இங்கு பார்க்கலாம். ஆசிரியர் செ.யேசுராசா இவர் தற்போது கனடா - அமெரிக்கா வாழ் குருநகர் சமூகசேவை அமைப்பின் ஆலோசகராக இருக்கின்றார். இந்த சமூக நல அக்கறையாளர் இப்படிக் கொதிக்கிறார். சரித்திரப் புகழ்பெற்ற அழகிய யாழ்ப்பாணத்தில் துறைமுகப்பட்டணமாக விளங்கிய யாழ்.குருநகர் துறைமுகப்பகுதி எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நினைக்கும் போது வருத்தப்படாமல் இருக்கமுடியாது. அப்பகுதியில் சுகாதாரம், சட்டம், ஒழுங்கு,கல்வி, பொருளாதாரம் அனைத்துமே பாதிக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கெல்லாம் நாட்டில் இத்தனை காலம் நடைபெறும் யுத்தத்தைக் காரணம் காட்ட முடியாது. யுத்தத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டாலும் மற்றவை யுத்தத்திற்கு முன்பும் இருந்த நிலையே.

இவ்விடயத்தை உன்னிப்பாக நோக்கினால் ஒரு நாட்டின் நல்பிரஜையாக வாழமுடியாதவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறவேண்டும். இப்பாதிப்புக்கு மூலகாரணம் அரசியல், முதலாளித்துவம், பிற்போக்கு சிந்தனையுள்ளவர்களின் தலைமைத்துவம் போன்றவற்றைக் காரணமாகக் கூறமுடியும்.

ஒரு சமூகவளர்ச்சியின் முக்கிய ஆணிவேரான கல்வியை அப்பகுதி மக்களுக்கு கொடுக்கப்படாததே இப்பின்னடைவிற்கு மூலகாரணம் எனக் கூறமுடியும். இப்பகுதியில் கல்வி போதிக்கும் கல்விக்கூடமாக குருநகர் சென்ஜேம்ஸ் வித்தியாலயம் (ஆண்கள் பாடசாலை) முக்கிய பங்கை வகிக்கிறது. இப்பாடசாலை கட்டப்பட்டு 49 வருடங்களாகி விட்டன. 1954ம் ஆண்டு இப்பகுதி மக்களுக்கென ஒரு பாடசாலை கட்டுவதற்கு அப்போது இப்பகுதியில் பாடசாலைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பாடசாலையும் கட்டப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு பாடசாலை புதிதாக அமைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயங்கள்.

1. குடிசன நெருக்கமற்ற சுற்றாடல்
2. சுகாதார வசதியுள்ள சுற்றாடல்
3. விளையாட்டு மைதானம்

மேலே குறிப்பிட்ட விதிகளுக்கு முரண்பாடாகவே 49 வருடமாக இப்பாடசாலை நடைபெற்று வருகின்றது.

முறையற்ற சூழலில் அமைந்திருக்கும் பாடசாலையில் கல்வி வளர்ச்சியை எப்படி எதிர்பார்க்க முடியும்? கல்வியின் பாதிப்பே அப்பகுதி மக்களின் எல்லாப் பின்னடைவிற்கும் மூலகாரணம் எனக்கூறமுடியும். சட்டம், ஒழுங்கு, சுகாதாரம் என்பனவற்றை மதிக்காத மக்களாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும். 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். இளைஞர்களே, யுவதிகளே ஒரு சமூகத்தின் பின்னடைவிற்கு ஆணிவேரான கல்வியை உயர்த்திட ஒன்றுபட்டு வாருங்கள்.

இப்படியான நிலைமையில் வருகின்ற நிர்வாகத் தலைமைத்துவமும் எந்தக் குறிக்கோளுமின்றி எவ்வித முன்னேற்றத் திட்டமின்றி இந்தக் கணணி விழிப்பின் வியப்பின் வீச்சிலும் தலைமைத்துவ, நிர்வாகம் முயற்சியாற்றுவதனால் எந்தச் சமூகமும் மகத்தான பலனைப் பெற்றுவிட முடியாது. தலைமைத்துவ நிர்வாகக் கடமை - முயற்சியிலும் ஒரு ஒழுங்கு பரிணமிக்க வேண்டும். குருநகரின் சூழல்களைச் சுற்றுப்புறங்களை நன்கு சிந்தித்துச் செயல்பட்ட தலைமைத்துவ நிர்வாகப் பொறுப்புவாய்ந்த அதிபர்கள் சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் எந்த மதிப்பிற்குரிய அதிபர்கள் இருந்தார்கள்?.
இருந்தவர்களின் வழிகாட்டலும் செல்லுபடியற்றதாகப் போனதே பின்னடைவிற்கான காரணகாரியமாக எண்ணித் தூக்கித் தூக்கி நிறுத்த முடியாமல் போனதே இச்சமூகம் பெற்ற வேதனைக்குரிய சாபமாகும்.

தொடரும் அதிபர்களும் தலைமைத்துவ - நிர்வாகக் கடமைகளின் முயற்சியில் அயற்சி அடையாமல் உழைப்பில் சலிப்படையாமல் கல்வியின் முன்னேற்றத்தை இச்சமூகம் அடைய உழைக்கவேண்டும். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறும் போது

"விடாமுயற்சி வெற்றி தரும்"

என்று பள்ளிக்கூடத்துக் கரும்பலகையில் எழுதிவிட்டுப் போனார் முசோலின். இனி பள்ளிக்கூடத்து தலைமைத்துவ நிர்வாகக் கடமையிலிருந்து பணியாற்றிவிட்டு வெளியேறிய மூன்று அதிபர்களைப் பார்ப்போம்.........

**மீண்டும் அதிபர்கள் வருவார்கள்....**

## பாரிசில் வரவேற்பு விழா



கலாபூஷணம் G.P. பேர்மினஸ் அண்மையில் ஐரோப்பிய கலைச் சுற்றுப்பயணத்தை மேற் கொண்டிருந்தார். குருநகர் சென். ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம், திருமறைக் கலாமன்றம் இணைந்து பாரிசில் பிரமாண்டமான வரவேற்பு விழாவொன்றை நடாத்தி கலைஞரை கௌரவித்தார்கள். இவரது கலைப்பயணம் மென்மேலும் தொடர அலை ஓசை சார்பில் வாழ்த்தி நிற்கின்றோம்.

## சிரிக்க முடிந்தால்

**கணக்கு வாத்தியார்:-** *என்னிடம் இருக்கும் ஐந்து ஆப்பிள்களில் இரண்டை உன் அக்காவுக்கு கொடுத்தால் உனக்கு என்ன வரும்?*
**மாணவன்:-** *சந்தேகம் வரும்.*

**அரசன்:-** *காணாமல் போன என் வீரத்தின் அடையாளமான இந்தப் "போர் வாள்" எங்கிருந்து கிடைத்தது?*
**சேவகன்:-** *நீங்கள் புறமுதுகுகாட்டி ஓடிவரும்போது தவறவிட்டு விட்டீர்கள் மன்னா.*

**நோயாளியின் மனைவி:-** *டாக்டர் என் கணவர் பிழைப்பாரா?*
**டாக்டர்:-** *எதுவும் 24 மணிநேரம் கழிச்சுத்தான் சொல்ல முடியும்*
**மனைவி:-** *இதை நான் நேற்றே கேட்டதா நினைச்சுக்கொள்ளுங்களேன் ப்ளீஸ்!*

**ஜோதிடர்:-** *உங்களுக்கு கல்யாணம் ஆனவுடன் தோஷமெல்லாம் விலகிவிடும்.*
**வந்தவர்:-** *எனக்கு எந்த தோஷமும் இல்லையே*
**ஜோதிடர்:-** நான் சொன்னது சந்தோஷம்.

**- திருமதி. சிறீ றேனு**


www.tamilarangam.net








# வெகு விமரிசையாக நடந்தேறி



ப5.03.2005 அன்று (Felix Faure - Paris 14) எனும் இடத்திலுள்ள மண்டபத்தில் சரியாக பிற்பகல் 4மணிக்கு முற்றத்துவாசம் கலைமாலை 5இன் நிகழ்வுகள் ஆரம்ப மாகியது. ஆரம்ப நிகழ்வுகளாக பிரதம விருந்தினா் வரவேற்பு, மங்களவிளக்கேற்றல், அமைதி வணக்கம், வரவேற்புரை, தலைமையுரை போன்றவை நிகழ்வு பெற்றது. இச்சம்பிரதாய நிகழ்வுகளை கலைக்குழுத் தலைவா் திரு.மனுவல் அன்ரன் நிகழ்த்தி வைத்தாா். அதனைத் தொடா்ந்து வருடா வருடம் இந்நிகழ்ச்சியில் புதிய அறிவிப்பாளா் அறிமுகம் செய்யப் படுவது வழக்கம். அந்தவகையில் இந்தவருடம் திருமதி. யசோதா எட்வேட் புதிய அறிவிப்பாளராக அறிமுகம் செய்து வைக்கப்பட அவா் தனது முன்னுரையுடன் கலை நிகழ்ச்சி களை அழகாக தொகுத்து வழங்கினாா்.

கலைநிகழ்ச்சியின் முதல் நிகழ்வாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துன்பியல் நடனமாக செல்வி. எமா்லினா வியூ அவா்களால் பரத நாட்டியம் அவைக்களிக்கப் பட்டது. தொடா்ந்து பல நடனங்கள் மேடையேற்றப்பட்டன. மேடையேறிய நடனங்களில் பெரும்பாலானவை கடற்கோள் அனா்த்தத்தின் பாதிப்பையும், உயிரிழப்பையும் தொட்டுச் செல்லும் நடனங்களாக அமைந்திருந்தது, முற்றத்துவாசம் கலைநிகழ்ச்சிக்கு பெருமை சோ்க்கும் விடயமாக அமைந் திருந்தது.

தொடா்ந்து திருமதி.யசோதா எட்வேட்டால் மேடை யேற்றப்பட்ட “தமிழும் அதன் சுவையும்” எனும் வில்லுப்பாட்டு முழுக்க முழுக்க சிறுவா்களாலேயே அவைக்களிக்கப்பட்டது. வில்லுப்பாட்டில் பங்கேற்ற அத்தனை சிறுவா்களும் மிகவும் அழகாக பங்கேற்று சபையோரின் பாராட்டுதலைப் பெற்றாா்கள் இந்நிகழ்ச்சியை அளித்த திருமதி. யசோதா. எட்வேட் பாராட்டுக்குரியவா் மட்டுமல்லாது தொடா்ந்தும் இதுபோன்ற நல்ல படைப்புக்களை மக்களுக்குத் தரவேண்டும் என்றும் வேண்டப்படுகிறாா்.







www.tamilarangam.net







# முற்றத்துவாசம் கலைவிழா 5



அடுத்து திரு.மனுவல் அன்ரன் நெறியாள்கையில் விடியலைத்தேடும் மழலைகள்' எனும் நாடகம் மேடையேற்றப் பட்டது. இந்நாடகத்தின் பாத்திரப் படைப்புக்கள், கதைக்களம், நடிப்பு எல்லாமே சிறப்பாக இருந்தது. அது மட்டுமல்லாது காலத்தால் வேண்டப்படும் ஒரு விடயத்தை காலத்தின் தேவைக்கேற்ப பதிவு செய்தது நாடக நெறியாளருக்கு கிடைத்த வெற்றியாகும். இதில் பங்கேற்ற அத்தனை நடிகர்களும் தமது சிறந்த நடிப்பால் நாடகத்தை இன்னும் மெருகேற்றினார்கள்.

தொடர்ந்தும் கவிதை, பாடல், பேச்சு என்று பல நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக மண்ணின் மைந்தர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இவ்வருடம் திரு.யேசுதாசன்(லண்டன்), திரு. டேமியன் சூரி, திரு. ஜே.ஏ. சேகர் ஆகிய மூவரும் பிரதமவிருந்தினர்களாக திரு.அல்பேட் புஸ்பராஜன் அவர்களால் மாலை அணிவித்து பொன்னாடை போர்க்கப்பட, சங்கத் தலைவர் திரு. குருசுமுத்து பீலிக்ஸ் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார்கள். இந்தக் கௌரவிப்பு நிகழ்வை கவிஞர் மா.கி.கிறிஸ்ரியன் அவர்கள் திறம்பட தொகுத்து வழங்கினார். பிரதம விருந்தினர் திரு.அல்பேட் புஸ்பராஜனின் சிறப்புரை இடம்பெற்றது. இவர் குருநகர் சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் தூணாக நின்று உழைத்தவர். தனது பாரியார், பிள்ளைகளுடன் விழாவிற்கு சமூகமளித்து பல நல்ல கருத்துக்களை வழங்கினார்.

இறுதியாக மாவீரர் கலைத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கும் பழைய மாணவர் சங்கத்தின் கலைத்திறன் போட்டியில் சிறப்புப் பரிசுபெற்ற சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டு நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவேறியது.






www.tamilarangam.net

# கவிதைச்சரம்

## ஒரு மனநோயாளியின் கவிதை

வேகமாய் இயங்கிக் கொண்டிருந்த
பைத்தியக் காரர்களின் உலகத்தில்
ஞானிகள் என்று அறியப்பட்டவர்கள் கூடி
சிரித்துக் கொண்டிருந்தனர்.

பச்சை விளக்குகட்கும்
சிவப்பு விளக்குகட்கும்
அர்த்தம் புரியாமல்
அவ்வுலகின் பாதை கடக்க
அச்சமுற்றான்
துயரப் பொட்டலங்களைச்
சுமந்து வந்த கவிஞன் ஒருவன்.

ஒரு பைத்தியம் தன்னைத் தானே
ரசித்து எழுதினால்
எவ்வளவு அழகாய் இருக்குமென்று
அவன் யோசித்துக் கொண்டிருந்தான்

பலரது அந்தரங்களுக்கு கால்கள் முளைத்து
அவனோடு வந்து பேசிக்கொண்டிருந்தன.

அவனது உலகின் பகைவர்கள்
அங்கேயும் சென்று ஏசிக்கொண்டிருந்தனர்

அவன் சிரித்துக் கொண்டும்
அழுது கொண்டு மிருந்தான்.

இப்போது நான் எங்கே, எவ்வாறு
இருக்கிறேன் என்று உணர்வதால்
நான் இன்னமும் முழுதாய்
பைத்தியம் ஆகவில்லை யென்று
எண்ணிக் கொண்டான்.
பைத்திய உலகின் புரிப்பை
எழுத முனைந்து
குறுக்கு மறுக்காய் ஓடிய எழுத்துக்களால்
தோற்றுப் போனான்
அவன் சிரித்துக் கொண்டும்
அழுது கொண்டுமிருந்தான்.

நீல வர்ணம் பூசப்பட்டு
அவன் முன்னாலிருந்த ஓவியமொன்று
நிமிடத்திற்கு நிமிடம்
உருமாறிக் கொண்டிருந்தது.

அவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாய்
அவனது உலகில் அவனுக்காய் யாரோ
அழும் குரல் கேட்டு
அவசர அவசரமாய்
அவனது உலகு திரும்ப
உத்தேசித்தான்.

இன்றுபோய் நாளை வாவென
அவனை அனுப்பிவைத்தது
நீல ஓவியம்,
வீதியில் நடந்தபோது அவன்
தனது நடை மாறியிருப்பதை உணர்ந்தான்
பழக்கப்பட்ட தொடருந்தில்
இயல்பாய் ஏறிக்கொண்டன
அவனது கால்கள் – அப்போ
அவனைச் சுற்றியிருந்த மனிதர்கள்
தன்னை விசித்திரமாய்ப் பார்ப்பதை அவதானித்தான்

நடந்த வற்றையெல்லாம்
வீடு வந்தபின் எழுதினான்
எழுதிக் கொண்டிருப்பதால்தான் இன்னமும்
முழுதாய் பைத்தியம் ஆகவில்லை யென்று
எண்ணிக் கொண்டான்.
இவ்வுலகின் இறுக்கமில்லா அவ்வுலகு போக
பிரயத்தனங்கள் புரிகின்றான்.

## மழை

மழையில் மணக்கும்
புழுதி மண்ணில்
மனிதவாடை வீசுகிறது

மண் முழுகிக் கழன்ற மணம்
இது வெளில்
இது மீண்டும் எங்கே குடிகொள்ளும்?
காற்று
எத்தனை காலத்திற்குத்தான் சுமந்து செல்லும்
மணங்களையும் மனிதர்களையும்?

செத்தவர்கள் விட்டுப்போன
பெருமூச்சுக்களை
இழுத்துவிடும் ஒவ்வொரு மூச்சிலும்
சாவின் மணம்....

பழசாகிப் போன உலகைக்
கழுவிக் கழுவி
புதுப்பித்துக் கொள்கிறது
மழை.

**மெலிஞ்சிமுத்தன் கவிதைகள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் வரும் நாட்கள்

## ஆசிரியர் : மு. புஸ்பராஜன் - நூலாய்வு : நளாயினி தாமரைச்செல்வன்

வாழ்வின் அகபுற நிலைகளை இவரின் கவிதைகள் தத்துருபமாக சொல்லி நிற்கிறது. **"ஒரு காலை"** என்ற தலைப்பிட்ட கவிதை நாம் ஈழத்தில் வாழ்ந்த காலத்தை அப்படியே காட்சியாக நம் மனக்கண் முன்னே விரிக்கிறது. ஆனந்தவாழ்வை ஏக்கப்பெருமூச்சோடு வாசித்து முடிக்கிறபோது மீண்டும் மீண்டும் விடியல்வரும் என்கின்ற நம்பிக்கை தீபத்தை ஏற்றுகின்றதான வரி. வெள்ளாப்பின் அடிவானச் செம்மைநோக்கி கரைந்து செல்கிறது காகம் ஒன்று.... **"நீதியும் சமாதானமும்"** என்ற தலைப்பிட்ட கவிதையில் வறுமைக் கோட்டின் விளிம்பில் தத்தளிக்கும் எம்மின மக்களின் அவலத்தை மிக அழகான வார்த்தை கொண்டு வடித்திருக்கிறார். எனக்கு மிகவும் பிடித்த வரிகள்... காலநகர்வில் மீண்டும் எழுந்தன வறுமையின் ஓச்சம். அடிவயிற்றில் எழுந்த தீயோ சிரசில் கொதிக்க வயிறு தடவிய கைகள் எங்கும் எழுந்தன. நீண்டு உயர்ந்த கைகளை வாள் கொண்டு வீசினர். வாள் முனையில் வடிந்த குருதியை வழித்தெறிந்து குன்றில் ஏறிக் குரலிடுகின்றனர். இந்த நாடே நீதியும் சமாதானமும் நிலவும் நாடென... இது பசிக்கொடுமையையும் அது தரும் வேதனையையும் அதனால் ஏற்பட்ட புரட்சியையும் அப்புரட்சி நசுக்கப்படும் முறையையும் நமக்கு சொல்லி நிற்கிறது. இதையே **"நீண்ட பெருமூச்சுக்கள்"** என்ற கவிதையும் **"அம்மாவும் அப்பாவும்", "வாடைக்காற்றே"** என்ற கவிதைகள் சொல்லி நிற்கின்றன மாறுபட்ட கோணங்களில்.

இத்தனை சோகங்களைச் சொன்ன கவிஞன் மீண்டும் புத்துயிர் பெற்று அழகிய கவிதையாகின்றான். **"கரைவும் விரிவும்"** என்ற தலைப்பிலான கவிதையில், இயற்கையை காதலிப்பவன் அடிக்கடி தன்னை நல்லதொரு கவிஞன் என வாசகர்களுக்கு அடையாளப்படுத்தப்படுகிறான். அந்த தரிசனத்தை கவிஞர் நமக்கு தந்துள்ளார். நாம் இயற்கையை ரசிப்பதற்கும் அந்த இயற்கையை வர்ணிக்கிற போது கேட்பதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கிறது. நம்மையெல்லாம் அழைத்துச் செல்கிறார் தனது கவி வரிகளோடு. இன்னும் நிறையச் சொல்லுவார் என நினைத்த வாசகனை ஏமாற்றிவிடுகிறார். ஆனாலும் பாருங்கள் இந்த வரியின் சுகமே நம்மை சூழ்கிறது. என்னுள் நானே மெல்ல மெல்ல கரைதல் கண்டேன். மெல்ல மெல்ல கரைந்து நிற்க சொல்லில் விரியாச்சுகம் சூழலெங்கும் சூழ்ந்திருக்க கவிதைச் சுகமெல்லாம் எந்தன் சிரசுகள் இதமாய் இறங்க நானே கவிதையாய் செறிந்து பரந்தேன்.... அடடா கவிஞனை பாராட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை. இந்தக் கவிதையை வாசிக்கிறபோது அந்தக் கவிஞனே இயற்கையோடு கரைந்து ஆவியாகிற நிலமையை காணக்கூடியதாக உள்ளது. இதற்கெல்லாம் நல்லதொரு குழந்தை மனசும் கவிமனசும்தான் காரணம். இதற்கூடாக தன்னை இரண்டாவது முறையாக நல்லதொரு கவிஞன் என வாசகரின் உள்ளம் சொல்ல வைத்திருக்கிறார்.

இதைப்போலவே அகலிப்பு, புரிதல் கவிதைகளும் இயற்கையை பாடி நிற்கிறது. **"அகலிப்பு"........** இரவே இதயம் படிந்த தடைகள் துடைக்க ஏக்கமாக நானிங்கு.. இரவின் நிசப்தத்தை அங்குலம் அங்குலமாக ரசித்த கவிஞனுக்கு புலம்பெயர் வாழ்வும் இயந்திரத்தனமான வாழ்வும் இரவின் நிசப்தத்தை கூறுபோடுவதாய் வந்தமர்ந்த கவிதையும் அந்த இரவின் யௌவன வடிவங்களும் அழகு. கவிஞர்கள் அடிக்கடி யோகநிலைக்கு வருவார்கள். அந்த நிலையை **"புரிதல்"** என்கின்ற கவிதையில் இந்த கவிஞன் அனுபவித்திருக்கிறார். இன்னமும் நானுனக்கு புரியாத புதிரா? அதிக மௌனத்திலும் உறவுகள் விலகி உள்ளொடுங்கிப் போவதிலும் வழிதவறிப்போனவனாய் விசனமேன் கொள்கிறாய்.... இப்படி பாடிய கவிஞர் இயற்கையை அணுஅணுவாக ரசித்துச் செல்கின்ற காட்சி என்னை உண்மையிலேயே பிரமிக்க வைக்கிறது. இதில் என் விழியோரம் ஈரக்கசிதலை தந்து செல்வதற்கான வரிகள் உண்மையிலேயே துடித்துப்போனேன். கண்கொள்ளும் தூரம்வரை அதோ இணையாது நீண்டு செல்லும் இரயில் பாதையில் படிந்துள்ள துயரின் மெல்லொலியை கேட்பதுண்டா......... காட்டிடையில் சூடிக்களிக்கவோ பார்த்து மகிழவோ எவருமின்றி பூத்தபின் உதிர்வு கொள்ளும் மலர்களின் சோகத்தில் கசிந்த துண்டா......... இந்த கவிதையோடு ஒன்றித்த எனக்கு இந்த கவிதையில் இருந்து மீள்வது என்பது முடியாத காரியமாகிவிட்டது.

**"81 மே 31 இரவு"** அன்றைய இராணுவ அடாவடித்தனங்கள் பற்றி சொல்லி நிற்கிறது. இதில் பெரிய ஆச்சரியம் ஒன்று மரணவாசலை நமக்கு மொழிவடிவில் கவிவடிவில் தந்திருப்பது தான் வாசகனை அப்படியே மரணவாசல்வரை கொண்டுவந்து விட்டிருக்கிறார் அந்தக் கவிதை மூலம். உயிரைக் கையில் பிடித்தபடி குண்டாந்தடிக்கும், துப்பாக்கிவெடிக்கும் தப்பியோடிய மக்களில் ஒருவனாய் என்னை நினைத்திருப்பாய் நானோ நம்பிக்கையின் கடைசித்துளியும் வடிந்து மரணத்தருகே..... இதற்கூடாக இன்னொன்றையும் நமக்குச் சொல்லிச் செல்கிறது கவிதை. ஈழத்தவர் தினம் தினம் சாகடிக்கப் படாமலே செத்து செத்துப் பிழைக்கும் வாழ்வாகிப்போனவர்களென்று. இந்தக் கவிதை எழுதி 14 வருடங்களாகிறது. இந்தநிலை இன்னும் தொடர்ந்தவண்ணம்தான் இருக்கிறது.

இதுபோலவே **"இக்கணத்தில் வாழ்ந்துவிடு"** கவிதையும் எமது துயரவாழ்வை சொல்லி நிற்கிறது. அதில் ஒரு பந்தி முனை முறிந்த தராசில் நிறுத்தப்பட்டு நகர்த்தப்படுவீர் என முடிக்கிறார். அந்த அநீதியை மிக இலகுவாக வாசகரின் மனதில் படியச்செய்யும்படியான வார்த்தைப்பிரயோகம் இது. **"பீனிக்ஸ்"** என்ற கவிதையில் தமிழனாகப் பிறந்ததினால் எத்தனை அவலங்களை நம் ஆட்சிபீட அரசு செய்கிறது என்பதனை மென்மையாக சொல்லி இருக்கிறார். அன்னை மடியில் தவழ்ந்தபோது சிறுவிழிகாட்டிச் சின்ன வாயால் அம்மாவென்று அழைத்ததாலோ நித்தம் நித்தம் முள்முடி சூட்டியும் ஆணிகள் அடித்தும் சிலுவையில் அறைகிறாய்? தலைப்பிடாத கவிதை அதற்கூடாக காந்தி தேசத்தை தோலுரித்துக் காட்டுகிறார். **"வெல்பவர் பக்கம்"** என்ற கவிதையிலான தலைப்பில் கவிஞர் சற்று தளர்ந்து போகிற நிலைமையை காட்டுகிறது. 1987ல் இந்தக் கவிதை எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் காலம் இந்திய இராணுவ காலம். அன்றைய ஈழத்தவரின் உண்மை நிலையினை

www.tamilarangam.net

அழகாகக் காட்டி இருக்கிறார். எதுவுமே செய்யமுடியாத நிலை. அந்தச் சோர்வை அவரின் கவிதை தத்ரூபமாக இயம்பி நிற்கிறது.

அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்களையே அடுத்த கவிதையும் சொல்லி நிற்கிறது. கவிதை **“கைவிடப்பட்டோர்”** (பக்கம் 63) கவிஞ ரின் கையறு நிலை. மிகவும் மனம் நொந்துபோய் எழுதியிருப்பது தெரிகிறது. வாளேந்திய சிங்கமும் தூணேந்திய சிங்கமும் இணைந்தபோது கைவிடப்பட்டோர் ஆகி சிதறடிக்கப்பட்டனர். மீண்டும் தாய்மார் இழுத்துச் செல்லப்படும் புதல்வர்களுக்காய் அந்நிய ஜீப்புக்களின் பின்னால் தலைவிரி கோலமாய் கதறத் தொடங்கினர்.... வீழ்தலும் சோர்வும் எழுதலுக்கே என்பதற்கேற்ப **“உதிர்வு”** கவிதை. இரண்டு வருட இடைவெளியில் உதிர்வு நல்லதொரு பிரசவமாக வந்துள்ளது. பாராட்டுக்கள். என்னை ஒருகணம் அதிரச்செய்து, விழியோரம் நீர் சிந்த வைத்த கவிதை அதற்கு தக்க மனமாற்றத்தை அள்ளிக்கொண்டு வந்து அமர்ந்திருக்கிறது. இந்த உதிர்வு சிதைவுறா மலர்களின் உதிர்வு மகத்துவம் அன்றோ அடடா அங்கே மனசு கனமானது இந்த வரிகளுக்காய் காட்டிடையில் சூடிக்களிக்கவோ பார்த்து மகிழவோ எவருமின்றி பூத்துப் பின் உதிர்வு கொள்ளும் மலர்களின் சோகத்தில் கசிந்ததுண்டோ......... அதற்கு ஒத்தடம் தருவதாய் இந்த கவிதை உதிர்வு.... பொன் ஒளிர் காலையில் கண் மலர்ந்து மௌனத்தில் கவிதை சொல்லும் வண்ணமலர்கள் அந்தி மென் இருளில் வனப்பு இழந்து வாடிப் பின் உதிர்கையில் துயரம் என்னுள் கசியும். ஒரு நாள் பொழுதிலா இவ் எழில் வாழ்வென ஏக்கம் என்னுள் வழியும். இவை எல்லாம் இன்று அற்பமாய்ப் போயின. வேண்டாப் பொருளாய் கடுக்கா நண்டுகளுக்காய் வானின்று வீழ்ந்து பகையில் உடல் சித றிப் போகும் உயிர்கள் முன்னால் சிதைவுறா மலர்களின் உதிர்வு மகத்துவம் அன்றோ.

**“கொடியும் கொம்பும்”** என்ற தலைப்பிலான கவி தையூடாக மூன்றாவது முறையாக தன்னை ஒரு கவிஞன் என அடையாளமிட வைத்திருக்கிறார் வாசகர்களுக்கு. காதல் என்பது ஒரு வரம். காதல் செய்யாதவர் இவ்வுலகிலே யாரும் இருக்க முடியாது. அதேபோல் காதல் வலியை காதலை பாடாதவன் கவிஞன் அல்லன். **“கொடியும் கொம்பும்”** நீண்ட இடைவெளியின் பின் சந்தித்தபோது முகமறியாதவள் போல கடந்து சென்றாய், கையில் குழந்தை, இடைவெளியில் கணவன் கொடியும் கொடிபடரும் கொம்பும் கல்லானாலும் புல்லானாலும் சமூகம் திணித்த ஒழுக்கக் காற்றில் நீயோர் அலையும் பஞ்சு. இவற்றிடையே நூல்நிலைய வேப்பமரமும் நீண்ட சந்தோஷ பெருங்கடலை வாசகர் முன் தந்து செல்கிறார். இதே போல் இன்னோர் காதல் கவிதை **“யாரது?”** எனும் தலைப்பிலான கவிதை. அதிலே கடைசி பந்தி நமது வயற்கால நினைவுகளை நீர்சொட்ட வைத்துவிடுகிறான் இந்த கவிஞன். வயற்கரைக் காற்று பட்டாலே ஒரு சுகம்தான் இலையலையாய் நெல்மணிக்கதிராட நிரைநிரையாய் வளையல்கள் களை பிடுங்கி வாய்க்கால் குளித்து வரப்போரம் நடைபயில நீர் தெளித்துப் போகும் ஈரக்கால்கள் யாரது கால்கள்.

**“பெயர்வு”** கவிதை (பக்கம் 65) மண்ணின் ஈர்ப்பை உதிர்த்து விண்ணில் விரைகிறது விமானம். (அடடா) முன்னோர் பெயர்ந்தோர் முகவரி இழந்து பனி உறைந்த மலைச்சிகரங்களிடையே விறைத்துப் புதைந்தும் சிவப்பு விளக்காய் முன் தெரிந்த போதிலும்......... அபாயம் என தெரிந்தும் இங்கு வந்து சேர்ந்தவர்கள்தான் நாம். ஆனாலும் இன்று வாழப்பழகிக்கொண்டோம். இது பெரியதொரு சிந்தனைச் சிதறலாக வேதனைக்குரிய பகுதியாக பார்க்கப்பட வேண்டியது. **“பதிவைப்பு”** என்ற தலைப்பிலான கவிதை புலம்பெயர்ந்தோர் பலரது வாழ்வின் கொடுமையை நிறுவமுயலும் கவிதை. பாராட்டுக்கள். புலம்பெயர்ந்தோர் அவலவாழ்வை கோடிடும் கவிதை. வேரோடு பிடுங்கி வளம்கொள் பூமியில் பதிவைத்த வாழ்வோ வேர் கொள்ளவில்லை. மூடுண்ட அறையும் அயலறியா வாழ்வும் நினைவுகளாய் வெந்து சிவந்த எனது மண்ணின் அழிவுகளின் குவியலும் சிதறிப்போன உறவுகளும் உடல்களும் மண் விரிந்த முடிவறியாப் பாதையில் நினைவுகளும் பெருமூச்சுக்களும் சுமையாய் கொண்ட தனித்த பயணம் ஆசைகளும் வாழ்வும் வேறு வேறாக தவறாய் நடப்பட்ட வாழ்வின் விதிப்பில் தொடர்[illegible]ருப்பு..... **“அம்மாவின் மரணம்”** அனேகரது உறவுகள் மரணம் இப்படித்தான் புலம்பெயர் வாழ்வோரின் அவல வாழ்வை நிதர்சனப்படுத்தும். அடுத்த கவிதை இது. ‘கூடும் குயிலும்’ தன் குரலுக்காய் இரத்தம் வழியக் குதறப்பட்டு வீதியில் விழுந்து துடிக்கிறது கூடில்லா குயில் குஞ்சு. நான்கே வரியானாலும் மனத்திடை பீதியை தருகிற வரிகள் இதற்கு எனது மௌனம் மட்டுமே பதிலாகிறது. இன்னோர் கவிதை நான்கே நான்கு வரிகள் தான் **“மீறல்”** என்ற தலைப்பிட்ட கவிதை வீதிக்காய் விரித்து நெரித்த கற்களிடையே சிறு புல் ஒன்று பூத்திருக்கு மீறல் இல்லா வாழ்வென்ன வாழ்வு. விதிக்கப்பட்ட கோட்டில் வாழ்கிற போது புரட்சி ஏது? பாராட்டுக்கள்.

**“குளிர்கால மரம்”** (பக்கம் 69) பெரியதொரு மனச்சுமை, பலவீனம், நம்பிக்கையீனம், ஈழத்து மற்றும் புலம்பெயர் வாழ்நிலை சூழல் தந்த கொடுமையின் ரணம் நிறைந்த கவிதை **“யன்னல்”** என்ற தலைப்பிலான கவிதை இன்னமும் புலத்தமிழர் பலரது மன, வாழ்நிலையை கூறிநிற்கின்றது. புலம்பெயர் வாழ்நிலையோடு ஒன்றிடாத மனதும், வாழ்வியலும் **“கனவுகளும் வாழ்த்துக்களும்”** என்ற தலைப்பில் அமைந்த கவிதை - இதுவும் இன்றைய புலம்பெயர் வாழ்வோடு ஒன்றிக்க இயலாத மன இயல்பை காட்டி நிற்கிறது. பல ஏக்கங்களையும் சோக சுமைகளையும் எண்ணி ஏங்கி நிற்கும் நிலை. ஆனாலும் கவிஞருக்கு ஒன்று இக்கணத்தில் வாழ்ந்து விடு என்ற தலைப்பிட்டு ஒரு கவி தையை எழுதிவிட்டு இன்றைய கையிலமர்ந்த வாழ்வை வாழ முடியாமல் தத்தழிப்பதை நிறுத்தி விட்டு இன்றைய பொழுதில் புலமானால் என்ன வாழப்பழகிக் கொள்ளுங்கள். இழப்பு என்ற தலைப்பிலான கவிதை - இந்த மனநிலை இன்றைய புலம்பெயர் வாழ்வின் பலரது - அதாவது அன்றைய காலத்தில் ஈழத்தில் பிரபல விளையாட்டு வீரர்களது ஏக்கபெருமூச்சை கொண்டு வந்து தருகிறது. எனக்கும் இன்றைய பந்தயங்களை தொலைக்காட்சியில் பார்க்கிறபோது சில சமயம் அழுதுவிடுவேன். இந்த கவிஞன் நல்லதொரு விளையாட்டு வீரனாகவும் வாழ்ந்திருக்கிறார். என்பது இதிலிருந்து தெட்டத்தெளிவாகிறது. நண்பனுக்கு ஏற்ற தலைப்பிலான கவிதை நண்ப சுதந்திரதிற்கான இருப்பு உனதென்றாய் நன்று. சுதந்திரம் இனிது. நிறைவும் தருவது. உனக்கு ஒவ்வாதோருடன் நான் நட்பு கொள்கையில் உன்னுள் நிகழ்வது என்ன? சுதந்திரத்தின் மகிமையும் ஒவ்வொருவரினதும் உறுதியான இருப்பும் இதுதான். **“மண்ணும் மனமும்”** கவிதையில் - இக்கவிதையும் புலப்பெயர்வு நமக்கெல்லாம் தந்த சோகத்தை சுமந்து

www.tamilarangam.net

நிற்கிறது. ஒருகாலை நினைவுகளும் மார்பில் தூங்கிய மழலைச் செல்வங்களும் இன்னும் இவையாய் என்மனக் கனவில் குதிரையோடு வருவதற்கு குத்தகை தந்தது யார்? மண்ணுக்கும் மன உறவுக்குமான வேர் ஆத்மார்த்தமானது அதிகாரத்தால் அறுவதில்லை அறிக... இதில் ஆக்ரோசம் பொங்க புலம்பெயர்ந்தோரது ஓட்டுமொத்த குரலாய் பதிவு செய்திருக்கிறார்.

**"மைனாவிடு தூது"** - ஈழத்து சோகத்தை சுமந்து நிற்கும் கவிதை. பனிக்காலம் தான் இங்கு எமக்கு அதிக தனிமையை தந்து நிற்பது. அத்தகையதொரு பனிக்கால தனிமையில் இருந்து இந்த கவிதையை எழுதி இருக்கிறார் கவிஞர். இலைகளை இழந்த கிளைகளின் நடுவே சிறகு கோதும் மைனாவே மைனாவே (பிறகு இப்படி கொதித்துப் போகிறார்) அவர்களுக்கான வீடு இழந்ததனால் நாடிழந் தவன் நான். இன்றவர்கள் ஊரும் இழந்து வாழ்ந்த மண்ணின் வேரும் இழந்தனர். ....1996ஆம் ஆண்டில் எழுதப் பட்டிருக்கிறது. இந்த கோபம் கொதிப்பு யதார்த்தமானது தான். காரணத்தை இந்த கவிதையிலே கதையாக சொல்லி இருக்கிறார். உணர்வுகளை வெளிப்படையாக எழுத்தில் தெரிவிக்காதவன் கவிஞன் இல்லையே நல்லதொரு காலப்பதிவு இது. இதே போல **"வெண்புறா"** என தலைப் பிட்ட கவிதை வெண்புறாவை வரவேற்கின்றதான கவிதை இது. நின் செங்காத்தாள் விரல் பதியா மண்ணெங்கும் அவலக்குரல்களும் அழிவுகளின் குவியல்களும். ஆண்டு பலவாய் அழிவும் அவலமுமாய் நீண்டு கிடக்கும் எம் வீட்டு முற்றத்தில் நடைபழகல் ஆகாதோ?... என முடித்திருக்கிறார்.

தனிமை என்பது கொடுமை. அதைவிட கொடுமை சகல இன்பங்களிலும் துன்பங்களிலும் ஒன்றாய் வாழ்வாகிப் போன தம்பதிகள் பிரிவது. அந்த சோகச்சுமையை இந்த தனிமை சொல்லி நிற்கிறது. 'தனிமை' உன்னால் தான் எனது **"தனிமை"** உன்னால் தான் ஆயினும் இருக்கிறேன் என்கிறாய். குண்டு வீச்சில் சிதறிய வீட்டில் முத்தங்களுடன் பிரிந்தோம் பனித்தன உன் விழிகள் நேசித்த மண்ணையும் உன்னையும் விட்டு விதிக்கப்பட்ட இருப்பில் பனித்த விழிகளே இன்றும் என்னுடன். பனி மூடிய கூரையில் குந்திய ஒற்றைக் குருவியாய் வரண்ட குளத்தில் ஒற்றை மலராய் வாழ்வின் நீட்சி. தனிமைதான் யாருக்கு யாரால்? **"வல்லூறும் வெண்புறாவும்"** என்ற தலைப்பிலான கவிதை - இதை நல்லதொரு சுவாரசியமான கதைவடிவாகக் கொண்டு போகிறார். சிங்கள அரசு நமக்குச் செய்த கொடுமைகளின் காலப்பதிவு. மிகச் சுருக்கமான வரலாறை சொல்ல முனைந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. நாலே நாலு பக்கங்களுக்குள் எமது நீண்டகால இனவெறி அரசின் அராஜகத்தை இரத்தினச்சுருக்கமாக தந்திருக்கிறார்.

**"கண்ணாடி"** என தலைப்பிடப்பட்ட கவிதை - எப் போது ஒருவன் தன் அழகை இரசிக்கிறானோ அப்போ அவனுக்கு இந்த உலகம் பிடித்து போகிறது. அல்லது வாழத்தொடங்கிவிட்டான் என பொருள். சோகத்தையும் பிரிவுத்துயரங்களையும் பாடிய கவிஞன் வாழத்தொடங்கி இருப்பது மனதுக்கு மகிழ்வைத் தருகிறது. இப்படி நான் எழுதி முடித்துவிட்டு அடுத்த கவிதைக்குள் நுழைகிறபோது நான் சொன்ன இந்த வாழ்தல் அங்கே தெரிகிறது. கவிதை **"அந்தியின் மின்னல்"** - அதேபோல் **"கோடை"** - அதே போல **"ஓயாத அலை"**. இந்த கவிஞன் வாழத்தொடங்கி இருப்பது மனதிற்கு சந்தோஷத்தைத் தருகிறது. வாழ்த்துக்கள்.

அம்மாவின் முகம் இதில் இந்த வரிகள் நம்மையும் பலத்த சோகத்திற்குள்ளாக்கிறது. வைத்திய அழைப்பிற்கான காத்திருப்பு அருகே அடிக்கடி எழும் பெருமூச்சுக்களுடன் அணைத்திருந்த கரங்களிடையே இரு சிறு விழிகள். சின்ன உடலில் என்ன நோயோ? வேதனையை விளக்க முடியாப்பிஞ்சு. அன்னை துயர் ஏன் என்பதும் அறியாத தளிர் மலங்க மலங்க விழிக்கும், விழிகள் மனதைப் பிழிகிறது. ....இவரது முதல் கவிதையான 'ஒரு காலை' என்ற கவிதையில் காகம் என்ற பறவையை மட்டும் ஏன் எழுதி இருக்கிறார் என்கின்றதான கேள்வி எனக்கு ஆரம்பம் முதலாய் வந்துகொண்டே இருக்கிறது. காரணம் நான் கூட காகம் என்ற தலைப்பிலான கவிதை ஒன்றை எழுதி இருக்கிறேன். இதனால் தான் இவரது கவிதைகளோடு ஒன்றித்தேனோ என்று கூட ஒரு சந்தேகம். ஆனாலும் இக்கவிஞனது கவிதைகள் அனைத்தையும் வாசித்து முடித்தபோது தான் புரிந்தது, அப்படியல்ல என. காகம் யாருக்குமே தீங்கு செய்யாத பறவை அழுக்குகளை அகற்றுகின்ற பறவை. தனது இனம் ஒன்று மரணித்து விட்டால் ஊரையே கூட்டி வைத்து அழும் அத்தன்மையான கவி மன உணர்வை இந்த கவிஞன் கொண்டுள்ளான் என்பது இக்கவிஞனது கவிதைகளுக்கூடாகத் தெரிகிறது.

ஆக மொத்தத்தில் இந்த கவிஞன் நல்லதொரு சமூக அக்கறை கொண்ட கவிஞனாகவே மிளிர்கிறான். வசதியாக, மரம் பற்றிய பாடல் ஆகிய கவிதைகள் என்ன சொல்ல வருகின்றன. என்பதனை புரிந்தும் புரியாத நிலை. ஆனாலும் ஓரளவு உணரமுடிகிறது. சரியானதா தவறாய்ப் போகுமா என்பதில் சற்று மனத் தயக்கம் எனக்கு. ஆனாலும் பலமுறை வாசித்ததில் நல்லதொரு சமூக குடும்ப அக்கறை தெரிகிறது. அதே போல ஸ்ராலின் கைகுலுக்க மறுத்த போது என்ற கவிதையிலும் சமூக அக்கறை தெரிகிறது.

இறுதியாக **"கவிதை"** என்கிற கவிதை வேலைச் சுமையைவிட மின்னலாய் தெறித்தன கவிதைவரிகள், தெறித்த பொறியில் விகாசம் கொள்ளாது மன யன்னலை மூடி வேலை முடித்து மின்னல் ஒளியை மீட்க முயல் கையில் உயிர் இழந்து கிடந்தது கவிதை. கவிதையும் வாழ்வும் ஒன்று. கவிதை வருகிறபோது எழுதிவிட வேண்டும். அதே போல தான் நமக்கெல்லாம் கிடைத்த மானிட வாழ்வும் இன்று வாழாது போனால் நாளை ஏது அந்த வாழ்வு? திரும்பி வந்துவிடுமா என்ன....!? எனது தந்தை அடிக்கடி சொல்லுவார் இன்று செத்தால் நாளை பால் என்பார். இன்றைய பொழுதை இன்பமாக்குவதே பேரின்ப வாழ்வு. இன்றைய நாளையும் இனிவரும் காலங்களையும் நமதாக்குவோம். வாழ்ந்து முடிப்போம். வாழ்க்கையில் ஒரு முறைதான் வாழ்ந்துவிடு வீழ்ந்துவிடாதே.



www.tamilarangam.net

# மகிழனின் கவிதைகள்

## முகங்கொள்...

ஓர் உடலுக்குள்
எத்தனை முகங்கள்
எப்படித்தான் முடிகிறதோ....

எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடியிலும்
வழுக்கிவிடும் துரோகங்கள்...

பிச்சைப் பாத்திரத்தில் இட்ட
தங்கக் காசுகளாய்
என் கனவுகள்
கரைந்து போகும்...

பலவீனங்கள் மீது
தொடுக்கப்பட்ட வழக்குகள்
காலாவதியாகிப்போக
மீண்டும்
பலவீனங்களை
பலவீனங்களே வெல்லும்...

பசப்பல் வார்த்தைகளில்
அறிவின் எல்லைகள்
நிர்ணயிக்கப்பட
அறியாமைக்குள் புகுந்த
அறிவுக் கூறுகள்
மலம் உண்ணும் கன்றுகளாய்...

புலம் தந்த பரிசாக
சீழ்வடியும் எண்ணங்கள்
சிதைவுறு நிலையிலும்
அறுபடா இழையாய்
தொப்புள் கொடி நினைவுகள்
புண்ணுக்கு மருந்தாகுமோ!....

## கடல் அன்னை...

வெள்ளிகள் தீர்ந்திடாத
வெள்ளாப்பில் பயணித்தலும்
சூரியன் எரிக்குமுன்னே
கிடைத்ததோடு
கரையேறுதலுமானது
நம் வாழ்வு ...

அங்காடி இரைச்சல்
செவிப்பறையை ஊடறுத்து
அலையோடு கரைந்து
காற்றோடு கலக்க
சவ்வரிசி கஞ்சிக்காய்
கைகள் என்
பை துளாவும்....

பையோடு படித்தவர்
கூறியானின்
எடுப்பு மீனின் விலைகுறைக்க
வெடுக்கென பாய்ந்ததில்
வெடுக்குத் தண்ணீர் சிதறிவிழ
ஓரமாய் ஒதுங்கி நின்று
இரசித்ததெல்லாம்.....

சூரியன் நேர்குத்தி
உச்சியில் விழ
கொதித்து நிற்கும்
மீன் குழம்புகளோடு
சில வயிறுகளும் கொதிக்கும்
அன்றைய உணவுக்காய்....

தினசரி வாழ்வில்
வரவுகளை செலவாக்கி கழிதலும்
நாளைய விடிவுக்காய்
கடலை நம்பியே நாமும்
எங்கள் அடுப்பங்கரையும்...

www.tamilarangam.net

# கலாச்சாரத்திற்கு பொது அளவு கோல் இல்லை

கலாச்சாரத்திற்கு பொது அளவுகோல் இல்லை சில பத்திரிகைகளைப் படிக்கும்போது காலையில் திருமணம் மாலையில் டிவோர்ஸ் என்ற அமெரிக்க கலாச்சாரம் என்றும் இன்னும் சிலர் அமெரிக்கர்கள் யாருடன் வேண்டுமானாலும் உறவு வைத்துக் கொள்வது போலவும் எழுதி இருக்கிறார்கள். அமெரிக்காவில் குடும்பம் என்ற அமைப்பே இல்லாதது போலவும், முதியோர்கள் அனைவரும் கட்டாயமாக விடுதியில் இருப்பது போலவும் எழுதுகிறார்கள். இதற்கு ஒரு படி மேலேபோய் சிலர் அமெரிக்கா பொருளாதாரத்தில் வேண்டுமானால் நம்மைவிட உயர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் நாம்தான் கலாச்சாரத்தில் உயர்ந்தவர்கள் என்று எழுதுகிறார்கள். கிராமங்களில் வாழும் அமெரிக்கர்கள் நினைத்ததுபோல் இந்தியாவில் யாரும் காடுகளில் பிள்ளை பெற்றுக்கொள்வது இல்லையோ அதேபோல அமெரிக்காவில் எல்லோரும் தனித்தீவாய் வாழ்வதில்லை.

பெண் தன் ஆண் நண்பரைத் தேர்ந்தெடுக்கமுன் தந்தை தாய் ஆகியோரிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அதேபோல் தங்கள் குழந்தைகள் குடும்பம் இவற்றோடு விடுமுறையை கழிப்பதும் விவாகரத்து ஆனாலும் குழந்தைகள் தங்கள் பாட்டில் உறவைத் தொடர்வதும் நடக்கிறது. இங்கேயும் தந்தை பெண்ணை நடத்தி செல்கிறார். தங்கள் பேரக்குழந்தைகளுடன் நாட்களைக் கழிக்க இவர்களும் ஊரைவிட்டு ஊர் மாறி வருகிறார்கள். இன்னும் சிலர், இத்தாலியிலிருந்து வந்தவர்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்வதும் உண்டு.

தன் மனைவி இறந்ததும் தனியாய் வாழ்ந்து பிறகு 75 வயதானவுடன் சாப்பாட்டைக் குறைத்து கொண்டு தன் பிள்ளைகள் மத்தியில் உயிரைவிட்ட வரை நான் அறிவேன். இன்னும் ஒரு பெண் தன் 90 வயதான தந்தையைக் குளிப்பாட்டிவிட்டு சாப்பாடு கொடுத்து பிறகு அலுவலகம் வருகிறார். அவருடைய 70 வயதுக் கணவன் பேரக் குழந்தைகளைக் கவனித்து வருகிறார். இதுபோல் எத்தனை குடும்பங்கள் உண்டு. பெற்றார், தங்கள் குழந்தைகள் இவற்றோடு அலுவலகம் சென்று வருபவரின் மன அழுத்தம் பற்றி மருத்துவர்கள் இப்போது கவலை கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். திருமணத்திற்கு முன் சேர்ந்து வாழ்வதும் பழகுவதும் இவர்களுடைய பழக்கம் என்றால், அதை குறை சொல்ல நாம் யார்?

அதேபோல் நன்றி வழங்கும் தினம், கிறிஸ்மஸ் போன்ற நாட்களில் மனைவி அல்லது கணவனின் உறவினரோடு அவர்களுடைய குடும்பவழக்கத்தை கடைப் பிடிக்கிறார்கள். கல்லூரியில் படிக்கும் பிள்ளைகளுக்காக இரண்டு வேலைகள் செய்பவர்களும் உண்டு. இதில் எதில் நாம் மாறுபட்டிருக்கிறோம்? ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பழக்க வழக்கம் உண்டு. நம்முடையது தான் சிறந்தது என்று யார் தீர்மானிப்பது? ஒருவனுக்கு ஒருத்தி என்பது நம் உயரிய பண்பாடு என்றால் வட இந்தியா சென்று பார்த்தால் கிராமங்களில் பல பெண்கள் திருமணமாகியும் வரதட்சணை பாக்கிக்காக தனியாய் இருப்பதும், கணவன் இன்னொரு பெண்ணுடன் உறவு வைத்திருப்பதையும் பார்க்கலாம். தமிழகத்திலும் இது அதிகரித்து வருவதாகப் படித்தேன். விவாகரத்து என்பதை நமது சமுதாயம் தவறான கண்ணோட்டத்தில் பார்க்காமல் இருந்தால் பலர் விவாகரத்து செய்திருப்பார்களோ என்னவோ. ஒருவனுக்கொருத்தி என்பது வழக்கத்தில் இருந்தால் இத்தனை AIDS நோயாளிகளும் பால்வினை மருத்துவர்களும் ஏன்?

பெற்றோரின் சமுதாய அந்தஸ்திற்காக மனம் விரும்பியவனை மறந்து இன்னொருவனை(ளை) திருமணம் செய்து கொள்வது மட்டும் சரியே? பொய்மை, மனம் விட்டு பேசக்கூட முடியாமல் அடங்கி ஒடுங்கி நடக்கும் பெண்கள் மன அழுத்தம் காரணமாக போலிச் சாமியார்கள் மாந்தரீகர்களிடம் ஆலோசனை கேட்டு செல்வதும், ஜோதிடமும் பிராயசித்தங்களும் என்று கோவிலே கதியாக இருப்பதும் எதை உணர்த்துகின்றன?

சடங்குகளும் சம்பிரதாயங்களும் மட்டும் கலாச்சாரம் என்றால், எது பெருமையானது? வட இந்தியர்களதா அல்லது தமிழர்களதா? ஒவ்வொரு மொழி பேசுபவருக்கும் தனி பழக்கம் உண்டு. இந்தியா முழுவதும் கலாச்சாரம் உயர்ந்தது என்றால், பஞ்சாபியரின் திருமணத்திற்கு சென்றிருந்தால் சோமசுரா பானங்கள் தண்ணீராய் ஓடுவது தெரியும். நடனமாதுவை அழைத்து ஆடவிட்டு அலங்கோலம் செய்வதும் தெரியும். அமெரிக்கவர்களே இப்போது புடவை கட்டி கொள்வதும் பொட்டு வைத்து கொள்ளவும் செய்கிறார்கள். அவர்கள் நம் கலாச்சாரத்தின் மகிமையை அறிந்து கொண்டுவிட்டார்கள் என்று பேசுவது இன்னும் அபத்தம் ஒன்றைக் கற்றுக் கொள்வதால் இன்னொன்றை தவறு என்று சொல்ல வேண்டிய தேவை இல்லை.

நமக்கு நம் பழக்கவழக்கங்கள் மீது அபிமானமும் பெருமையும் இருக்கலாம். அதற்காக இன்னொன்றை முழுவதும் தெரிந்து கொள்ளாமல் தவறென்று சொல்லாதீர்கள். ஆப்பிரிக்க பழங்குடியினருக்கு அமெரிக்க இந்தியர்களுக்கு, இத்தாலியினருக்கு என்று தனி கலாச்சாரம் உண்டு. அதை நமது அளவுகோல் கொண்டு அளக்க வேண்டாம். ஏனெனில் நமது பார்வையே இப்போது பல விடயங்களில் மாறிவிட்டது. மாறுவதும் புதியன புகுதலும் ஒரு கலாச்சாரத்தை அழிப்பதென்பது தவறாகும்.

**- நன்றி தமிழ்மணம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தனிமையில் இனிமைகாண முடியுமா?

தனிமை ஒரு கொடுமையான உணர்வு
தனிமையை அதிகப்படுத்துவதே தியானம்
தன்னை புரிய மறுப்பவன் பாடும் பல்லவி
தனிமையில் இனிமை காண முடியுமா?

உடல் உள தாக்கத்தில் மூழ்கிய நிலையில்
உதிர்ந்த சருகைப் போன்றதுவே
ஊனமுற்ற வாழ்வை மனத்திரையிடும்...
ஊமை கண்ட கனவை உரைக்க முடியாது
தனிமையும் அவ்வாறுதான்

இதயம் ஒன்று மனிதகூட்டுக்கு இருந்தும்
கூடி வாழ்வது கோடி நிறைவு
இருள் வருவது இயற்கையாமே!
இருந்து விடியலை வரவேற்பது இயல்பு.

உள்ளம் உள்ளவன் பிறரை நேசிப்பான்
உண்மை அன்பை பகிர்ந்திடுவான்
உயிர் இன்றி உடல் இல்லை
உணர்வு பூர்வமான வாழ்வுக்கு கூட....
உறவு அவசியமான ஒன்றே!

விரக்தியின் விளிம்பில் உள்ளவன் தனிமையை
விரும்பி அணைத்தபோதும் அதன் ஒட்டா நிலையை
விதியென்று புலம்பெயர்ந்தோர் வாய்விட்டு புலம்பிடுவார்
விழி வழி கண்ணீர் கூட தனிமையில்
தண்ணீரில் அழும் மீனுக்கு ஒப்பாகுமே!

இயற்கையை படைக்கையில் மானிடன் தனிமையை நீக்கவே
இறைவனும் நிறைவென கண்ணுற்றானே!
இயன்றவரை தனிமையை போக்கியே நாம்...
இன்புற்று வாழவே நல்பொழுது போக்கியே
இனிமை காண முயன்றிடுவோம்!!

- டக்ளஸ் ஒலின்ரா



# இனிய நட்பு

உள்ளத்தின் பூரிப்பில் மலரும் வார்த்தைகள்
ஆத்மாவின் துடிப்பை ஆரத்தழுவியபடி
அரங்கேற்றுவது நட்பு
இனிய கானங்களின் இன்னிசையில் வீசிடும்
இனிய ஸ்வரமே நட்பு.

சோகத்தைக்கூட சுகமாய் மாற்றி
இதயத்தின் நாளத்தில் நாதமாய் ஒலிக்கும்
நிஜமான கீதமே நட்பு
இனியவை கூறி இன்முகம் காட்டிடும்
இனிய நட்பின் முன் காதலும் தோற்றுவிடும்

உன்னத நட்பின் முன் இரத்த
உறவுகளும் தோற்றுப் போகும்
தேடியும் கண்டுபிடிக்க முடியாத
தேசத்திற்கு போன பின்னும்
நினைவுகளின் நம்பிக்கையில்
காத்திருப்பது நட்பில்தான்!

திருமதி. சிறீ றேனு.

# கல்வி

காற்றில் பறப்பதல்ல கல்வி
கற்றவரை மதிக்க தூண்டும்

காற்றுக்கு அணையும் தீபமல்ல கல்வி
காலத்தையும் கடந்து நிற்பது

அலைக்கு ஒதுங்குவதல்ல கல்வி
ஆழ்கடல் போல அளவிடமுடியாதது

அலைவந்தால் கிடைப்பதல்ல கல்வி
அசையாத மலையது

கல்லடி படுவதல்ல கல்வி
கௌரவிக்கப்பட வேண்டியது

எளிதில் எடுக்க முடிவதல்ல கல்வி
எல்லோருக்கும் கொடுக்கக் கூடியது

அடிக்கு அடங்குவதில்லை கல்வி
படித்தால் வருவதே.

டக்கிளஸ் ஒலின்ரா.

www.tamilarangam.net

# ஈழத்து நாவல் வரலாற்றில் ஒரு சூரியஉதயம்

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் புனித பத்திரிசியார் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம்
அனுசரணையுடன்

மா.கி.கிறிஸ்ரியனின்

# புயலுக்குப்பின்

நாவல் வெளியீட்டு விழா

**காலம்: 01.10.2005 - சனிக்கிழமை 3.00 மணிக்கு**


**விழா மண்டபம்: 54, Rue Torcy - 75018 PARIS (M°: MARX DORMOY)**

**நாடறிந்த கவிஞனின் சிறுகதைத் தொகுப்பு - குறுநாவல் தொகுப்பு - கவிதைத் தொகுப்புகள் - கட்டுரைகள் - நாடகங்கள் - நாட்டுக்கூத்தெனப் படைத்தளித்த பன்முகத் திறமைகொண்ட படைப்பாளியின் முதல் நாவல்**

நாவல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள், பங்குகொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
01 48 52 39 05
01 49 45 96 80
01 69 63 99 84
01 60 20 96 17
06 11 32 76 48

**நடனம்: நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்**
**நடனம்: குருநகர் கலாபமயில்கள் எமர்லினா குழுவினர்**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**விழாக்குழு - பிரான்ஸ்**





குருநகரின் புதிய குருமணி
அருட்திரு: தார்சீசியஸ் நிருபன் நிஷானந்

இறைவனுக்குள் தன்னை அர்ப்பணித்து
வார்த்தையாகி வழி காட்டும
குருநகரின் புதிய குருமணியே
இறையருள் பெற்று
அவர் பணி செய்து
உலகெலாம் அறம் ஓங்க
உண்மையின் தொண்டனாய்
இறை பணி ஆற்ற
வாழ்த்துகிறோம்..! வாழ்த்துகிறோம்..!
வாழ்த்துகிறோம்..!

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்